
வெற்றி மனோபாவம்

(ஜப்பானிய அணுகுமுறை)

கங்கை புத்தக நிலையம்

டாக்டர்

எம்.எஸ். உதயமூர்த்தி



வெற்றி மனோபாவம்

(ஜப்பானிய அணுகுமுறை)

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

கங்கை புத்தக நிலையம்

13, தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை – 600 017.

முதற் பதிப்பு	:	ஜனவரி, 1998
இரண்டாம் பதிப்பு	:	ஜூன், 1998
மூன்றாம் பதிப்பு	:	பிப்ரவரி, 1999
நான்காம் பதிப்பு	:	பிப்ரவரி, 2000
ஐந்தாம் பதிப்பு	:	பிப்ரவரி, 2001
ஆறாம் பதிப்பு	:	நவம்பர், 2001
ஏழாம் பதிப்பு	:	நவம்பர், 2003
எட்டாம் பதிப்பு	:	மே, 2004
ஒன்பதாம் பதிப்பு	:	மே, 2005
பத்தாம் பதிப்பு	:	மார்ச், 2006

விலை : ரூ.25.00

- TITLE : VETRI MANOBHAVAM
- AUTHOR : Dr. M.S. UDAYAMOORTHY
- LANGUAGE : TAMIL
- EDITION : TENTH EDITION, MARCH, 2006
- No. OF PAGES : viii + 108 = 116
- PUBLISHED BY : **GANGAI PUTHAKA NILAYAM**
  13, Deenadayalu Street,
  Thyagaraya Nagar,
  CHENNAI - 600 017.
- PRICE : Rs.25.00

ஆசிரியர் முகவரி :

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி
மக்கள் சக்தி இயக்கம்
17ஏ, சௌத் அவென்யு, காமராஜ் நகர்,
திருவான்மியூர், சென்னை – 600 041.

Printed at : Ragavendra Agencies, Chennai - 600 005. ☎ 28446166, 28446891

உங்கள் முன் ....!

இரண்டாவது உலக மகா யுத்தத்திலிருந்து ஜப்பான் நாடு வெகுவேகமாக மீண்டது. இன்று உலக அரங்கில் மிக முக்கிய பங்கை அது வகிக்கிறது. அமெரிக்கர்கள் அதைக்கண்டு அஞ்சுகிறார்கள்; சீனா சினேகம் பிடிக்க முயல்கிறது.

நம்முடைய நாட்டில் ஏன் சுதந்திரம் பெற்றபின் அத்தகைய "கிடு கிடு" மாற்றம் ஏற்படவில்லை?

யோசியுங்கள்! மக்கள் தொகை? பல்வேறு கலாசாரம், சாதி, மதம், இனம் கொண்ட பிரிவுகள்? வெள்ளைக்காரர் விட்டுப்போன ஆதிக்க மனோபாவம் கொண்ட அரசும், அரசாங்க யந்திரமும்? கிராம மக்களை 50 ஆண்டு கழித்தும் படிப்பறிவு பெற்றவர்களாக ஆக்காத குறை?

இன்னமும் நாம் இதுபற்றி தீர்க்கமாக ஆராயவில்லை.

தலைக்குத் தலை சொல்லிக் கொண்டிருக்கிறோம் இப்படிப்பட்ட விஷயங்கள் ஜப்பானிலே "குழுவாக தகவல் சேகரிப்பு மூலம் அறிவு" என்ற ஓர் அற்புதமான முறை கடந்த 1970லிருந்து பின்பற்றப் படுகிறது

ஓர் உதாரணம்: ஜப்பானில் ஆட்சி செய்த கட்சிக்கு தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. கூட்டணி ஆட்சி வரும் வாய்ப்பு தென்பட்டது. உடனே அரசாங்க யந்திரம் கூட்டணி ஆட்சியின்

விளைவுகள் என்ன, குறைகள் என்ன, அந்தக் குறை பாடுகளை எப்படிப் போக்கலாம் என்று ஆராய ஐரோப்பாவுக்கு ஒரு குழுவை அனுப்பியது. காரணம் ஐரோப்பாவில் பல நாடுகள் தனிக்கட்சி பெரும் பான்மையற்று கூட்டணி ஆட்சி நடத்தி வந்ததுதான்.

இதை ஆராய்ந்தார்கள்; கூட்டணி ஆட்சியினர் குறைகளை முன்கூட்டியே எதிர்பார்த்து அவற்றைப் போக்கத் திட்டம் தீட்டினார்கள். உடனே அவற்றை செயல்படுத்தினார்கள்.

அதேபோல, அமெரிக்கர்கள் நீச்சலில் தலை சிறந்து விளங்கினார்கள் என்றால் உடனே அங்கே ஆட்களை அனுப்பி ஆராய்ந்து, ஜப்பானிய மக்கள் நீச்சலில் வெற்றி பெற திட்டம் தீட்டி பயிற்சி கொடுத்து ஜப்பான் இன்று நீச்சலில் சர்வதேச அளவில் வந்து விட்டார்கள்.

அவர்கள் செய்ததைப் பார்க்குபோது, நம் நாட்டில், நம் தலைவர்களாலும் கட்சிகளாலும் **நாட்டு நன்மை** முன்வைக்கப்படவில்லை என்றுதான் நினைக்க வேண்டி இருக்கிறது. போதுமான அறிவுடன், பயிற்சியுடன் இவர்கள் சட்டமன்றத்திலோ, பாராளு மன்றத்திலோ போகவில்லை; போவதில்லை;

பதவியைப் பிடிக்க வேண்டும், அதிகாரத்தில் அமரவேண்டும் என்ற ஆசை; அத்துடன் வரிப் பணத்தை கொள்ளையடித்து தேர்தல் செலவை ஈடுகட்டலாம் என்ற மனப்போக்கு; சொத்து சேர்க்கும் ஆசை; இதற்கெல்லாம் சாட்சியாக இருக்கும் படித்த 60 சதவிகித நடுத்தர வர்க்கம்!

நம் நாடு என்றாவது மாறவேண்டும்! இப்படி எழுதி தெரிவித்தால் ஏதாவது எங்காவது ஒரு நல்ல மண்ணில் இந்த எண்ணம் விழாதா என்ற நல்லெண் ணத்தில் - ஆதங்கத்தில் - எழுதப்பட்டது இந்நூல். அமெரிக்கப் பேராசிரியர்கள் நிறைய ஆராய்ந்து, ஜப்பான் பற்றி எழுதி இருக்கிறார்கள். நானும் ஜப்பான் சில முறை சென்றிருக்கிறேன்.

இதை எழுத என்னைத் தூண்டியர் எனது இனிய நண்பர், பெரிய எழுத்தாளர், பேராசிரியர் கல்கி அவர்களுடன் பழகிய மாமனிதர், சமீப காலம் வரை 'ஓம் சக்தி' பத்திரிகையில் ஆசிரியராக இருந்தவர், நாட்டின்பால் அக்கறைகொண்ட காந்தியவாதி - திரு. பகீரதன் அவர்கள். அவருக்குத்தான் நான் நன்றி சொல்லவேண்டும். இக்கட்டுரைகள் பலவும் ஓம் சக்தியில் வெளிவந்தன.

பகீரதன் மயிலாடுதுறையைச் சேர்ந்தவர். அவரது அன்புக்கும் பரிவுக்கும் நட்புக்கும் நான் ஈடு செய்ய முடியாது.

அடுத்து வானதி திருநாவுக்கரசு அவர்களும் அவரது மூத்த குமாரர் சோமுவுக்கும் நான் நன்றி சொல்லவேண்டும். சதா நான் எழுதவேண்டிய அவசியத்தை வாரா வாரம் எடுத்துச் சொல்லி வந்தவர் வானதியின் மாமனிதர் திருநாவுக்கரசு. அபூர்வப் பிறவி. சாதனையாளர்; காஞ்சிப்பெரியவர், வாரியார் சுவாமிகள் என்று ஆன்மிக பக்கபலம் பெற்றவர்.

"நான் எங்கள் இயக்கத்திற்கு செலவழிக்கக் கூடிய நேரத்தை விட எழுத்திற்குத்தான் செலவழிக்க

வேண்டும். இதுதான் நிற்கும்" என்று கூறியவர்! இனிய குடும்ப நண்பர். அப்படியொரு பழக்கம்.

அவரது மூத்த குமாரர் சோமுவுக்கு என் மீதும் என் எழுத்தின் மீதும் அபாரமான நம்பிக்கை. சோமு இந்நூல் வெளிவர பல வகைகளில் உதவினார். அவரது வேண்டுகோளை மறுப்பதென்பதோ ஒத்திப் போடுவதோ முடியாத காரியம்! அவருக்கு என் அன்பும் ஆசியும் நன்றியும். இனிமையும் செயல்பாடும் கொண்ட இளைஞர் ராமு - வானதியின் இளைய குமாரர் - என் நூல்களை அருமையாக பதிப்பித்து வெளிக்கொணர்பவர். அவருக்கு என் அன்பும், ஆசியும், நன்றியும்.

படிப்பதுடன் என் வாசகர்கள் பலரும் நாட்டுக்காக இறங்கி உழைப்பதைப் பார்க்கிறேன். அந்த நல்ல உள்ளங்களுக்கெல்லாம் என் மனமார்ந்த நன்றி.

ஜனவரி 10, 1998
நீலங்கரை,
சென்னை – 600 041.

சகபயணி
எம்.எஸ். உதயமூர்த்தி

காணிக்கை

எனக்குத் தோள் கொடுத்து, எல்லாப் பணிகளிலும்
கை கொடுத்து பொது நன்மைக்கே பாடுபடும் என்
இனிய நண்பர் மூத்த வழக்கறிஞர், தொழிலதிபர்
மக்கள் சக்தி இயக்க நிர்வாகக் குழு உறுப்பினர்,

உயர்திரு. நாமக்கல். **கே. கைலாசம்**
அவர்களுக்கும்

எவ்வித சிரமங்களையும் பாராது, எல்லா
சமயங்களிலும் எனக்கு நல்ல ஆலோசனை
கொடுத்து, தானே பொறுப்பேற்று மக்கள் சக்தி
இயக்கத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட
பெரிய நிறுவனங்களின் நிதி நிர்வாகி
என் இனிய நண்பர்

உயர்திரு. **எஸ். பார்த்தசாரதி**
அவர்களுக்கும்

இந்நூலைக் காணிக்கை ஆக்குகிறேன்.

— எம்.எஸ். உதயமூர்த்தி

பொருளடக்கம்

1

ஜப்பானில் பொருளாதார விந்தைகள்

டோக்கியோவிலுள்ள இந்திய தூதரகத்தில் ஒரு விருந்து கொடுத்தார்கள்.

திரு மாதவன் என்ற தமிழர் ஒருவர் அங்கே தூதுவராக இருந்தார்.

முப்பது இந்திய தொழிலதிபர்கள் - ஜப்பானில் வியாபாரம் செய்பவர்கள் ஒன்று கூடியிருந்தார்கள். எல்லோருமே வடக்கத்தியர்கள்தாம்.

பேசிக்கொண்டிருந்த பொழுது ஜப்பானில் வசிக்கும் ஓர் இந்தியர் கூறினார்:

"ஜப்பானியர்கள் நம்மைவிட ஒன்றும் புத்திசாலிகளல்ல!"

"ஜப்பானியர்களை விட நாம் உயர்ந்தவர்கள்" என்று தற்பெருமை பேசுவதன் மூலம் நாம் முக்கியமான விஷயத்தைக் கோட்டை விட்டுவிடு கிறோமோ என்ற கவலை என் மனத்துள் எழுந்தது.

கடந்த இருபத்தி ஐந்து ஆண்டுகளில் போரில் தோற்று. ஏழ்மையில் வாடிய ஒரு ஜப்பானிய சமுதாயம். எப்படி இன்று உலகம் போற்றும் பொருளாதார தொழில் வளம் பெற்றிருக்கிறது என்பதுதான் ஜப்பானின் அதிசயம்; விந்தைகள்.

அதைப் புரிந்து கொள்ளாமல் நாம் தற்பெருமை பேசி நம்மை மறக்கிறோமோ என்ற சந்தேகமும் கோபமும் என்னுள் எழுந்தன.

"நாம் புத்திசாலிகள்தாம். சந்தேகமில்லை. ஆனால் அவர்களிடம் காணப்படும் ஒரு கூட்டு மனப்பான்மை. கட்டுப்பாடு, எளிமை, பவ்வியம், பிரச்னைகளை அணுகும் விதம், மரியாதை, உழைப்பு இவை எல்லாம் அவர்களிடம் இருக்கிற அளவுக்கு நம் சமுதாயத்தில் இல்லை.

"அதனால்தான் நாம் ஒரு சமுதாயமாக - மொத்தமாக - முன்னேறவில்லை.

நம்மில் ஒரு சிலர் முன்னேறி இருக்கிறோம். அவர்கள் மேற்சொன்ன குணங்களை தங்கள் சமுதாய கலாசாரமாக மாற்றி இருக்கிறார்கள்.

"சமுதாய நோக்கில் விஷயங்களை அணுக நாம் தவறிவிட்டோம். அதனால்தான் நாற்பதாண்டு சுதந்திரத்திற்குப் பின்னும், இந்தியாவில் தேக்கம்" என்றார் ஏ.பி.எஸ். மணி.

ஏ.பி.எஸ். மணி வெகு நாட்களாக ஜப்பானில் வாழ்பவர். அருமையான மனிதர்.

ஒரு ஜப்பானிய கம்பெனியின் நிர்வாகி.

அவருடைய அனுபவம் அங்கே பேசியது. ஜப்பானியர்களைப்போல் நாம் என்று முன்னேறு வோம் என்ற ஆதங்கத்தை அவர் பேச்சில் கேட்டேன். பேசும்போது, "சார், இந்த ஜப்பானியர்கள்..." என்று அவர்களது நடைமுறை அனுபவங்களை விளக்கமாகக் கூறுவார்.

முன்னேறிய சமுதாயங்களைப் பார்த்து அவர்களது முன்னேற்றத்திற்கான அடிப்படைகளைப் புரிந்து கொண்டு அதை நம் நாட்டிலும் அறிமுகப்படுத்த வேண்டும் என்ற ஆசை கொண்டவன் நான்.

இருபத்தி ஐந்து ஆண்டுகள் அமெரிக்காவில் இருந்த அனுபவத்தினால் அந்த நாட்டைப் பற்றிய விஷயங்களை நன்கு அறிவேன்.

ஜப்பான் நாடும் எனது ஜப்பானிய நண்பர்களும், சமீபத்தில் ஏற்பட்டிருக்கும் ஜப்பானிய பொருளாதார வளர்ச்சியும், என்னைப் பெரிதும் சிந்திக்க வைக்கின்றன; அதிசயத்தில் ஆழ்த்துகின்றன.

ஜப்பானிய வளர்ச்சி பிரமிப்பூட்டுவதாக இருக்கிறது.

ஜப்பானிய பொருளாதார ஆதிக்கம் இன்று அமெரிக்காவையும் மற்ற நாடுகளையும் கதிகலங்க அடித்துக் கொண்டிருக்கிறது.

ஜப்பானியர்கள் முதன் முதலில் ஜெர்மனியைப் பார்த்து காமிராவைக் காப்பியடித்து காமிராக்களை உற்பத்தி செய்தார்கள்.

தரத்திலும் சரி, வேலைப்பாட்டிலும் சரி, அவை ஜெர்மன் காமிராவுக்கு சமமாகவும் மேலாகவும் இருந்தன.

சில ஆண்டுகள் கழிந்தபின் ஜப்பானிய கார், ஜப்பானிய டெலிவிஷன் பெட்டி, ஜப்பானிய கம்ப்யூட்டர் என்றும், ஜப்பானிய சேமியா –

ஜப்பானிய நூடில்ஸ் என்ற பெயரில் அமெரிக்காவின் மளிகைக் கடையைக் கூட படை எடுத்துவிட்டது.

வெகு எளிதாக சமைக்கக்கூடிய 'நூடில்ஸ்' - சேமியா இன்று அமெரிக்க வீடுகளில் மதிய உணவுப் பொருளாக உட்கொள்ளப்படுகிறது.

அமெரிக்கர்கள்தான் கார் உற்பத்தியில் முதலிடம் வகிப்பவர்கள். தரமான - அழகான சொகுசான கார்களை உலகம் பூராவும் விற்கிறார்கள்.

அவர்கள் உற்பத்தி செய்த கார்களை ஜப்பானுக்கு அனுப்பினார்கள். அவை அதிகம் விற்கவில்லை.

ஆனால் ஜப்பானிய கார்கள் இன்று அமெரிக்காவின் முப்பது சதவிகித தேவையை ஈடுகட்டுகிறது.

இதற்கு என்ன காரணம்?

ஜப்பான் நாட்டில் நமது ஊர் போல வாகனங்கள் சாலையின் இடது புறமாகச் செல்ல வேண்டும். எனவே நமது ஊர் கார்களிலும், கார் ஸ்டீரிங்கை (திசை திருப்பும் சாதனத்தை) வலது பக்கத்தில் பொருத்தி இருக்கிறார்கள்.

எதிரும் புதிருமாகச் செல்லும் போது நமது ஸ்டீரிங் வலது புறத்தில் இருப்பது சௌகரியமாக இருக்கிறது.

எதிரில் எவரும் காருடன் ஒரு நூலிழை அகலத்தில் எதிரும் புதிருமாக இடிக்காமல் செல்ல முடிகிறது.

அமெரிக்காவில் சாலையின் வலது புறத்தில் காரை ஓட்டிச்செல்ல வேண்டும். அதாவது காரின் ஸ்டியரிங் - வண்டியின் திசை திருப்பும் கருவி காரின் இடது புறத்தில் இருக்கும். இந்தக் காரை வைத்துக் கொண்டு இடது புறத்தில் செல்லும் சாலை விதிகள் உள்ள ஜப்பான் போன்ற நாட்டில் கார் ஓட்டுவது கஷ்டம். ஆனால் அமெரிக்கர்கள் என்ன செய்தார்கள்?

இதுதான் நாங்கள் செய்யும் கார். இதை உங்கள் ஊரில் செளகரியத்திற்கேற்ப உபயோகித்துக் கொள்ளுங்கள் என்று கூறி இடது பக்க ஸ்டீரிங் உள்ளதையே ஜப்பானில் விற்க முயன்றார்கள்! தோற்றார்கள்.

ஆனால் வலது பக்கம் ஸ்டீரிங்கை வைத்து கார் தயாரிக்கும் ஜப்பானியர்கள் அமெரிக்காவுக்காக இடது கைப்பக்கத்தில் ஸ்டீரிங்கைப் பொருத்தி அமெரிக்காவில் விற்றார்கள்.

அமெரிக்கர்களுடைய தேவைகளுக்கேற்ப அவர்களது அணுகு முறையை மாற்றினார்கள்.

அத்துடன் பெட்ரோல் அதிகம் குடிக்காத சிறிய கார்களை ஜப்பானியர்கள் குறைந்த விலையில் தயார் செய்தார்கள். கேட்க வேண்டுமா ஜப்பானிய கார் விற்பனைக்கு?

"ஜப்பானில் கார் விற்பதற்காக எங்களது தயாரிப்பு முறையை மாற்றுவது அதிக செலவாகும்" என்பது அமெரிக்கர்களின் வாதம்; கணக்கு.

அமெரிக்காவில் 'சூப்'புகள் மிகவும் பிரசித்தம். நன்றாகத் தயாரிப்பார்கள் ருசி மிக்கவை.

அப்படிப்பட்ட நாட்டில் மூன்று நிமிடங்கள் கொதிக்கவைத்து நான்கு வெவ்வேறு ருசியில் சூப் தயாரிக்கும் ஜப்பானியர்களது சூப் பொட்டலம் இன்று அதிகமாக விற்பனை ஆகிறது.

அமெரிக்க சூப்பின் பாதி விலையில், ஓரளவு வயிறு நிறையுமாறு நூடில் கலந்த சூப்புகளை ஜப்பானியர்கள் விற்கிறார்கள்.

ஜப்பானியர்களது சாதனைகளை விளக்க இன்று புத்தகங்கள் எழுதப்படுகின்றன. உலகமே அதை வாங்கி ஆச்சரியத்துடன் படிக்கிறது.

சோனி டி.வி., சுசூகி அல்லது டோயோட்டா மோட்டார் கார்கள் எல்லாம் சகஜமான அமெரிக்க பொருட்களாகிவிட்டன.

நிர்வாகக் கலையை சிறப்பாக உலகுக்கு அளித்த அமெரிக்க நாடு, இன்று ஜப்பானில் நிர்வாகக் கலை எப்படி இந்த அதிசயங்களை - விந்தைகளைச் சாதித்திருக்கிறது என்று ஆராய்ந்து வருகிறது.

அமெரிக்காவிலிருந்து ஜப்பானுக்குச் சென்ற நிர்வாகக்கலை இன்று ஜப்பானிய நிர்வாகக் கலையாகி, திரும்ப அமெரிக்காவுக்கே ஏற்றுமதி செய்யப்படுகிறது என்றால் இந்த விந்தையை என்னவென்று சொல்ல?

ஒரு நாடு வளம் பெறும்போது "ஜப்பானியர்கள் குள்ளமானவர்கள்'' என்று யாரும் பரிகசித்து எழுதுவதில்லை.

மூங்கில் தட்டி வீடுகள் என்று யாரும் இளக்காரமாக இப்போது எழுதுவதில்லை; ஜப்பான்

சாமான்கள் எல்லாம் 'ஜப்பான் பொம்மை' போலிருக்கும். நீடித்து வராது என்று அவர்களது பொருளின் தரம் பற்றி இன்று எழுதுவதில்லை.

மூவாயிரம் மைல் நீளங்கொண்ட அமெரிக்காவின் சாலைகளிலே நியூயார்க்கிலிருந்து சான் பிரான்சிஸ்கோ வரை ஓடுகின்றன - எங்கோ ஜப்பானில் செய்த கார்கள்! லாரிகள்!

இந்தியாவின் ஏழ்மை, குடிநீர் கூட இல்லாத கொடுமை. பிச்சைக்காரர்கள், தரமில்லாத பொருட்கள், ஏமாற்றும் வணிகர்கள் என்று இந்தியாவைப் பற்றி உலகம் பேசுகிறது.

இது மாற வேண்டுமானால் நாம் என்ன செய்ய வேண்டும்?

ஜப்பானியர்களிடமிருந்து என்ன தெரிந்து கொள்ள வேண்டும்?

தமிழ் மக்கள் எதைப்பற்றிப் பேச விவாத மேடைகள் அமைக்க வேண்டும்?

பல்கலைக்கழகங்கள் எதை ஆராய வேண்டும்?

ஜப்பானிய சமுதாயத்தின் இயல்பான பாரம்பரியக் குணங்கள் அதன் முன்னேற்றத்திற்குக் காரணமா அல்லது இரண்டாவது உலக மகாயுத்தத்தில் தோற்றபின் அவர்களுடைய சிந்தனைகளும் செயல்களும் மாறிவிட்டனவா?

எத்தகைய கல்விமுறை அங்கே போதிக்கப் படுகிறது?

குழந்தை வளர்ப்பின் அடிப்படை என்ன, அவர்களது முன்னேற்றத்திற்குக் காரணம் உழைப்பா,

ஒழுங்கான நியதிகளா, ஜென் புத்த மதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளா? - இவற்றை நாம் ஆராய வேண்டும், அறிய வேண்டும்.

பிரச்னைகளை அவர்கள் அணுகும் விதம், அவர்களது எளிமை... என்ற பலவற்றையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆழ்ந்து நோக்குமிடத்து ஜப்பானியர்களின் மன இயல்புகள்தான் - அவர்களது ஆழ்மனத்தில் ஊறிப்போயிருக்கும் நம்பிக்கைகள்தான் - கலாசாரமாக மாறி ஜப்பானிய வெற்றிக்குக் காரணமாயிருக்கின்றன.

எனவே ஆழத்தில் சென்று அவர்களது மன இயல்புகளை நாம் புரிந்து கொள்ள முயலவேண்டும்.

எடுத்துக்கொள்ளக் கூடியவற்றை நம் வாழ்வில் உபயோகித்து முன்னேற இந்தியாவின் மொத்த சமுதாயத்திற்குமாக நாம் வழிகாண வேண்டும்.

2

ஜப்பானின் வெற்றி மனோபாவம்

'நாயர் ஹோட்டல்' என்ற பெயரையும் அதன் விலாசத்தையும் டாக்சி டிரைவரிடம் காட்டினேன்.

டிரைவரின் கண்கள் அகல விரிந்தன. ஒரு புன்னகை. ஜப்பான் மொழியில் "அந்த இடத்துக்குப் போக வேண்டுமா?" என்கிற விதத்திலே முகத்தில் ஒரு நட்பு கலந்த சிரிப்பு. மரியாதையுடன் கூடிய வணக்கம் நிறைந்த தலையாட்டு.

டாக்சி டோக்கியோவின் வீதிகளில் ஓடியது.

வீதிகள், நெடுஞ்சாலைகள் எல்லாம் அமெரிக்கா போல் அவ்வளவு அகலமாக இல்லை.

வீடுகள் நெருக்கமாக கட்டப்பட்டிருந்தன.

சிறு சிறு சந்துகளில் எல்லாம் சிறு சிறு கடைகள் இருந்தன. ஜன நடமாட்டம் அதிகமாக இருந்தது.

தெருக்களெல்லாம் சுத்தமாக இருந்தன.

ஏதோ ஒரு சுருங்கிய - நெருக்கப்பட்ட அமெரிக்காவைப் பார்ப்பது போல் தோன்றியது.

நாயர் ஹோட்டலைக் கண்டு பிடிப்பதில் சற்று சிரமம் இருந்தது. டிரைவர் தவறாக பல தெருக்களைச் சுற்றி வருகிறார் என்பதை உணர்ந்தேன்.

போலீஸ் ஜீப் ஒன்றின் அருகில் காரை நிறுத்தி சரியான விலாசம் விசாரித்தார் டிரைவர்.

ஜீப்பில் இருந்த போலீஸ்காரர்கள் தங்கள் தலைமை போலீஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு நாயர் ஹோட்டலின் சரியான விலாசத்தைத் தெரிவித்தனர். எல்லாம் இரண்டு நிமிடங்களில். நாயர் ஹோட்டல் அடுத்த தெருவில்தான் இருந்தது.

நான் டாக்சியின் மீட்டரில் காட்டிய பணத்தைக் கொடுத்தேன்.

ஜப்பானியர்கள் 'டிப்ஸ்' வாங்க மாட்டார்கள்.

நான் பிரயாணம் செய்த டாக்சியின் டிரைவர் தன் பையிலிருந்து பணம் எடுத்துத் திரும்ப என்னிடம் கொடுத்தார்.

"நான் சரியாகக் கொடுத்த விலாசத்திற்கு நேரடியாக வரவில்லை. மன்னியுங்கள். நேராக வந்திருந்தால் இவ்வளவுதான் டாக்சி சார்ஜ் ஆகி இருக்கும்! ஆகவே மீட்டரில் உள்ளதைக் கொடுக்க வேண்டாம்" என்று சிரிப்பு சிரித்து விட்டு, குனிந்து வணக்கம் செலுத்தினார்.

அவருடைய செய்கை என்னை பெரும் வியப்பில் ஆழ்த்தியது.

"பரவாயில்லை. மீட்டரில் உள்ள பணத்தை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று நான் வற்புறுத்தினேன்.

"இல்லை. முடியாது. நான் வாங்க மாட்டேன். இவ்வளவுதான் ஆகி இருக்கும்" என்று அவர் முறுவலித்து மறுத்தார்.

ஓரிரு நிமிடம் பெரும் நாடகமே நடந்தது!

பக்கத்தில் இருந்தவரிடம் டிரைவர் விஷயத்தைச் சொன்னபோது அந்த ஜப்பானியர் டிரைவருடைய சிபாரிசுக்கு வந்து டிரைவருக்கு அதிகப்படியாக நான் கொடுத்த பணத்தை திரும்பவும் வாங்கிக் கொள்ளும் படி கூறினார்.

நான் பணத்தை வாங்கிக் கொண்டேன்.

மனிதர்களிடையே எப்படி நியாய உணர்வு செயல்படுகிறது என்ற உயர்ந்த எண்ணம் என்னை ஆகாயத்தில் தூக்க, நான் நாயர்சானின் உணவு விடுதிக்குள் நுழைந்தேன்.

நான் இந்தியா வந்தபோது இதை என்னுடைய நண்பர் ஜேம்ஸ் பிரடெரிக்கிடம் கூறிக் கொண் டிருந்தேன்.

இதே போன்று தமக்கு ஏற்பட்ட ஒரு சம்பவத்தை அவரும் கூறினார்.

இரண்டு பேரும் ஒரு நிமிட நேரம் பேச்சையே மறந்து ஜப்பானிய சமுதாயத்தின் உயர்ந்த பண்பில், நாகரிகத்தில் ஆழ்ந்து போனோம்.

கவனியுங்கள், டாக்சி டிரைவர் பல தெருக்களை நியாயமாகச் சுற்றி இருக்கிறார். இதில் வருவது கொஞ்சம் அதிகமான வருமானம் என்பது கண்ணுக்குத் தெளிவாகத் தெரிந்த விஷயம்.

ஆனால் அந்த ஜப்பானிய டிரைவர் அதைக் கவனிக்கவில்லை.

அதற்கு மாறாக எங்கோ இருக்கும் மூலாதார மான 'நியாய உணர்வை' முன் வைத்து விஷயங்களை அணுகுகிறார்.

நீதி, நேர்மை, உதவி, உண்மை என்ற மூலங்களின் முன் ஒரு செயல் உறைத்துப் பார்க்கப்படுகிறது; இன்றைக்கு கிடைக்கும் லாபமல்ல.

இப்படிப்பட்ட குணம் சமுதாய இயல்பாக இருப்பதை ஜப்பானில் கண்டேன்.

இதைத்தான் "வாழ்வை ஒரு சரித்திர நிரோட்டமாகப் பார்க்கும் பெரு நோக்கு" என்றும், மூலத்தைத் தொடும் "தாய்மை உணர்வு" என்றும் மன இயல் அறிஞர்கள் எழுதுகிறார்கள்.

ஒரு வாரம் ஜப்பானில் தங்கி இருந்தேன். அதற்குப் பின் இரண்டாண்டுகள் கழித்தும் ஜப்பானுக்குப் போயிருந்தேன்.

சாப்பாட்டிற்கும் ஹோட்டலில் தங்கும் அறைக்கும், உலகிலேயே அதிகமாக செலவாகும் இடம் - அமெரிக்காவைப் போல் இரண்டு, மூன்று பங்கு செலவாகும் இடம் - ஜப்பான்.

பணச்செலவு என் கவனத்தைத் திருப்பிய போதும் என் உள்ளத்தில் நிறைந்த விஷயம் இதுதான்.

என் மனத்தில் ஒரு குறுகுறுப்பையும் புதிரையும் பெரு மகிழ்வையும் ஏற்படுத்திய விஷயம் இதுதான்...

சமுதாய குணநலன் - அவர்களது மனோ பாவம் - அவர்களது வாழ்க்கை முறை - அவர்கள் போற்றும் பண்புகள் - அந்த பண்புகளுக்கும் அவர்கள் முன்னேற்றத்திற்குமுள்ள நேரடி தொடர்பு.

மன இயல் அறிஞர் 'கார்ல் ஜங்கின்' தத்துவப்படி ஒரு தாய்மை உணர்வு, ஒரு தாயின் அரவணைப்பு, சமுதாயத்தையே ஒரு பெரிய குடும்பமாகப் பார்க்கும் மகத்தான ஒரு பெருநோக்கு - இவைதான் ஜப்பானிய மக்கள் வாழ்வின் அடித்தளம் என்று உலக இயல் அறிஞர்கள் எழுதுகிறார்கள்.

அந்தத் தாய்மை உணர்வுதான் என்ன?

'நேரம் ஓடுகிறது' என்று கடிகாரத்தைப் பார்ப்பதற்குப் பதில் நேரத்தை ஒரு பிரபஞ்ச இயக்கமாகவே காணும் மனோபாவம். குடும்பத்தின் விரிவாக்கமாகிய சமுதாயத்தைப் பார்க்கும் உன்னதமான குணம்.

உதாரணமாக அமெரிக்காவில் தொழில் விஷயமாக பேச்சு வார்த்தை நடத்தினோமானால், அது வெகு வேகமாக விவாதிக்கப்பட்டு முடிந்துவிடும்.

ஜப்பானில் தொழில் விஷயமாக பேச்சு வார்த்தை நடத்தினோமானால் ஜப்பானியர்கள் விவாதிக்கவும் பேசவும் நிறைய நேரம் எடுத்துக் கொள்கிறார்கள்.

நம்முடன் விவாதம்; பின் அவர்களிடையேயும் விவாதம், அதற்குப் பின் மேலதிகாரிகளுடன் விவாதம்.

இப்படி பலவிதமான விவாதங்கள் மூலம் ஒத்த அபிப்பிராயத்தை உருவாக்க முயல்கிறார்கள்.

இதில் காலம் ஒரு பொருட்டல்ல. பல்வேறு இயக்கங்களையும் ஒன்று திரட்டி ஒரு லட்சியத்தை நோக்கிச் செல்லும் பேர் இயக்கமாக பேச்சு வார்த்தைகளைக் கருதுகிறார்கள்.

ஒரு கூட்டு உணர்வு - அணைத்துச் செல்லும் அரவணைப்பு - இதன் விளைவாக ஒரு முடிவுக்கு வருகிறார்கள்.

இதுதான் ஜப்பானியர்களின் அணுகுமுறை.

ஒரு காலத்துக்குள் கட்டுப்பட்டு இல்லாத ஜீவன்கள் இந்தப் பிறவியில் வாழ்ந்து மலர முயற்சிப்பதாக வாழ்வை ஜப்பானியர்கள் எடுத்துக் கொள்கிறார்கள்.

எனவே அங்கு அவகாசமில்லை. நிரந்தரம் தான் முக்கியம்.

உலகமோ, பொதுவாக அநித்தியம் என்று எண்ணப்படுகிறது. இந்த அநித்திய உலகத்தையே எப்படி ஜப்பானியர்கள் நித்திய உலகமாக மாற்றுகிறார்கள்?

ஒரு சென் புத்த மதக் கதையைக் கேளுங்கள்.

ஞானம் பெறுவதற்கு குருவிடம் வந்து சேருகிறான் ஒரு சீடன்.

"ஒரு கை தட்டும் சத்தத்தை நீ கேட்டிருக்கிறாயா?" என்கிறார் குரு.

"கேட்டேன் சுவாமி!" என்கிறான் சீடன். அடுத்த கணம் விரல்களால் நொடித்து ஒரு கையிலிருந்து சத்தத்தை உண்டாக்கினான்.

"இல்லை" என்கிறார் குரு.

மறுநாள் குருவிடம் சீடன் வருகிறான். தான் கொண்டு வந்திருந்த கமண்டலத்திலிருந்து ஒரு கையால் நீரை கீழே ஊற்றுகிறார் குரு. சலசலவென்ற நீர் கொட்டும் சத்தம் கேட்கிறது.

"இல்லை" என்கிறார் குரு.

ஓராண்டு காலம் கழிந்து விடுகிறது. சீடன் மீண்டும் குருவைத் தேடி வருகிறான்.

இப்போது குருவின் கேள்விக்கு உரிய விடையுடன் வருகிறான்.

"ஞானியே! ஒரு கை தட்டும் சத்தத்தை - அந்த சத்தமில்லா சத்தத்தை - நான் கேட்டேன்!" என்கிறான்.

ஞானி புன்னகை புரிகிறார்.

என்ன அந்த ஒரு கை தட்டும் சத்தம்? சத்தமில்லாத சத்தம்?

தியானத்தின் மூலம் ஏற்படும் நிசப்தம் தான்.

மூலத்தை நோக்கி ஓடி மோன நிலையில் அமர்கிறதே, அந்த நிலைதான் ஒரு கை தட்டும் சத்தமாக இருக்க முடியும்.

இந்த சென் புத்த கதையைக் கேட்கும்போது மூலத்தை நாடி ஓடும் உணர்வு - ஒரு காலங் கடந்த உணர்வு - மூலத்துடன் ஐக்கியமாகியிருக்கும் ஒரு அரவணைப்பு - என்று எல்லாவற்றையும் நம்மால் உணர முடிகிறது.

ஒரு ஜப்பானிய டாக்சி டிரைவர் இன்றைய லாபத்தைக் கவனிப்பதில்லை.

நிரந்தரமாக இருக்கும் நியாய லாபத்தை முன் வைத்து நடக்கிறார். பேசுகிறார்; வாழ்கிறார்.

நம்முடைய ஊரில் இருக்கும் ஒரு டாக்சி டிரைவரின் செயலையும் அல்லது உயர் மட்டத்தில்

வாழும் ஒரு அமைச்சரின் செயலையும் இந்த ஜப்பானிய டாக்சி டிரைவரின் செயலுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். ஒரு ஜப்பானிய சமுதாய மனோபாவத்தைக் கவனியுங்கள்.

"தேநீர் அருந்தும் சாந்தியம்" ஜப்பானியர்கள் தேநீர் அளித்து விருந்தினரை உபசரிக்கும் ஒரு சாந்தியம்.

இதை ஜப்பானியர்கள் எப்படி ஒரு கலையாகச் செய்து மகிழ்விக்கிறார்கள் என்பதை தேநீர் வழங்கும் இடத்துக்கு என்னை அழைத்துச் சென்று காட்டினார்.

'தேநீர் அருந்துவதற்கு எப்படி உட்கார வேண்டும்? எப்படி கை நீட்டி தேநீர் கோப்பையை வாங்க வேண்டும்? எப்படித் தேநீரை அருந்த வேண்டும்?' என்று தேநீர் அருந்துவதை ஒரு இனிய சாந்தியமாகவே ஆக்கி இருக்கிறார்கள்.

குனிந்து வணக்கம் தெரிவிப்பது; மண்டியிட்டு அமர்வது; தேநீரை ருசித்து, ருசித்து சாப்பிடுவது என்று அதிலே ஒரு வாழ்க்கையின் முழுமையை உருவாக்கி இருக்கிறார்கள்.

இது "சும்மா, 'டீ' குடிக்கும் விஷயமல்ல!"

அதற்கும் மேலே - ஒரு பாரம்பரியம், ஒரு விருந்தோம்பல், பரஸ்பர மரியாதை - என்று நம்மை அரவணைத்துத் தொடும் ஒரு மகத்தான தாய்மை உணர்வை அங்கே காண முடிகிறது.

இதை எல்லாம் ஜப்பானியர்கள் தங்கள் தேசியப் பண்பாடாக, நாகரிகத்தின் ஒரு பகுதியாக ஆக்கி இருக்கிறார்கள்.

நல்ல பண்புகள் மொத்த சமுதாயத்திலும் தனி மனிதர்களால் கடைப்பிடிக்கப்படும்போது அது நாட்டின் பண்பாடாக, நாகரிகமாக உயர்ந்து நிற்கிறது.

அதாவது நாணயம், நேர்மை, நிரந்தரம் என்று அடிப்படை விஷயங்கள் பற்றி ஒவ்வொரு ஜப்பானிய தனி மனிதரும் முழு அக்கறை செலுத்துகிறார்கள்.

"இது மற்றவர்களை வாழ்விக்கவும், அதில் நாம் வாழவும் ஏற்பட்ட உலகம்'' என்கிற உணர்வை ஜப்பானில்தான் பார்க்க முடிகிறது.

சில நாடுகளில் - குறிப்பாக நம் நாட்டில் - இது நாயையே நாய் தின்னும் உலகம் என்கிற கோட்பாட்டில் சுயநலத்துடன் செயல்படும் பழக்க வழக்கங்களைப் பார்க்கிறோம்.

3

ஜப்பான் நிகழ்கால அணுகுமுறை

ஜப்பானின் தொழில் வளர்ச்சியைக் கவனியுங்கள்; அமெரிக்காவில் உபயோகப்படும் 40 சதவிகித மோட்டார் காரை ஆண்டுதோறும் இன்று ஜப்பான் ஏற்றுமதி செய்கிறது.

அதேபோலத்தான் ஜப்பானில் தயாராகும் டெலிவிஷன் பெட்டிகள், ரேடியோ, டெலிபோன், கடிகாரம் போன்ற எலக்ட்ரானிக் சாமான்கள்.

ஜப்பானிய வர்த்தகப் படையெடுப்பைக் கண்டு அமெரிக்க வர்த்தகம் திகைக்கிறது. தவிக்கிறது என்று சொன்னால் மிகையாகாது.

இதன் அடிப்படை என்ன? இதுவரை கார் செய்யாத - கார் உற்பத்தியில் அனுபவமில்லாத - ஜப்பானியர்களால் எப்படி மிகப் பெரிய அமெரிக்க நாட்டுடன் கார் உற்பத்தியில் போட்டி போட முடிகிறது?

கலர் டெலிவிஷன் 1960 ஆம் ஆண்டு வாக்கில் முதன் முதலில் அமெரிக்காவில்தான் அறிமுகப் படுத்தப்பட்டது.

ஆனால் 1980 ஆம் ஆண்டில் ஜப்பானிய சோனி, நேஷனல் போன்ற கம்பெனிகளின் டெலிவிஷன்

பெட்டிகள் அமெரிக்க டெலிவிஷன் பெட்டியின் தரத்தை எல்லாம் தோற்கடித்து விட்டன.

இது எப்படி?

இங்கேதான் சூட்சுமம் இருக்கிறது.

அமெரிக்காவுடன் போட்டி போடுவதாவது, - அமெரிக்கா பெரிய ராட்சஸ நாடாயிற்றே - என்ற பயம். கவலை அவர்களை சிறிதும் பாதிக்கவில்லை.

கார் செய்ய வேண்டும் - அருமையான, தரமான, குறைந்த விலைக் கார் செய்ய வேண்டும் - என்ற ஒரே எண்ணம்தான் அவர்கள் மனத்தில் இருந்தது.

இன்று ஜப்பானில் பிரபல கார் கம்பெனியாக விளங்கும் ஹாண்டா கார் கம்பெனியின் துவக்கம் ஒரு சிறு மோட்டார் சைக்கிள் உற்பத்தியில்தான் ஆரம்பித்தது.

கார் செய்யும் போதோ கம்ப்யூட்டர் செய்யும்போதோ, "நமக்கு இதெல்லாம் அனுபவ மில்லையே" என்ற பயம் ஏதும் அவர்களுக்கில்லை.

அவர்கள் பழமையை எண்ணுவதில்லை; மெல்லுவதில்லை. பழமையின்படி அவர்களது முயற்சியை முடக்குவதில்லை.

அவர்களது மனோபாவ அடிப்படையை மிக அழகாக விளக்குகிறார் சடாகோ அகியாமா என்ற பெண்மணி - ஜப்பானிய மன இயல் அறிஞர்.

"ஜப்பானியர்கள் பொதுவாக நேற்று என்பதன் பொதியைச் சுமப்பதில்லை. அதேபோல நாளை என்பதன் பாதிப்பிற்கு மரத்துப் போனவர்களாகத் தென்படுகிறார்கள்.

"என்னையே எடுத்துக்கொள்ளுங்கள். நான் டோயோ பல்கலைக் கழகத்தில் பேராசிரியர். நாளைக்கு 'ஜப்பானிய வாழ்வில் தாய் தத்துவம்' என்பது பற்றி பேச வேண்டும். அதுபற்றி சிந்திக்க வேண்டிய தருணம் வரும்வரை நான் கவலைப்படப் போவதில்லை.

"நேற்று மன நோயாளிகளுடன் நேரத்தைக் கழித்தேன். அது நேற்றுடன் முடிந்துவிட்டது" என்று சொல்கிறார்.

பெரும்பாலான ஜப்பானியர்கள் 'இன்று என்பது இங்கிருக்கிறது இப்போது. இன்றைய காரியத்தில் முழுக் கருத்தைச் செலுத்துவோம்' என்றுதான் வாழ்கிறார்கள்.

கையிலிருக்கும் காரியத்தில் தான் கண்ணாயிருக் கிறார்கள்.

"இன்று என்பது இதோ, இங்கே. அதில் கவனம் செலுத்து" என்ற தத்துவத்தை அவர்களுடைய சமய இலக்கிய பாரம்பரியம் எப்படி பிரதிபலிக்கிறது என்பதைப் பாருங்கள்.

ஜோசு என்ற புத்தமத குரு தேநீர் அருந்திக்கொண்டு இருக்கிறார். அப்போது ஒரு புதிய துறவி உள்ளே நுழைகிறார். ஞானிக்கு வணக்கம் செலுத்துகிறார்.

ஜோசு ஒருமுறை அவரைப் பார்க்கிறார். "இதற்கு முன் உங்களை நான் பார்த்திருக்கிறேன்" என்கிறார்.

"இல்லை சுவாமி!" என்று வருகிறது பதில்.

"அப்படியானால் வாருங்கள்! என்னுடன் கொஞ்சம் தேநீர் அருந்துங்கள்" என்கிறார் ஞானி.

சிறிது நேரம் கழித்து மற்றோர் துறவி உள்ளே நுழைகிறார். வணக்கம் செலுத்துகிறார்.

"இதற்கு முன் உங்களைச் சந்தித்திருக்கிறேன்."

"ஆம் சுவாமி."

"ஆகா! அப்படியா! வாருங்கள் என்னுடன் கொஞ்சம் தேநீர் அருந்துங்கள்!" என்கிறார் ஞானி.

இவர்கள் இருவரும் சென்ற பின்பு அந்த புத்த மடத்து நிர்வாகி ஜோசுவைப் பார்த்துக் கேட்கிறார்.

"ஒருவர் உங்களை முன்னே சந்தித்ததில்லை என்றார். அவரையும் தேநீர் அருந்த அழைத்தீர்கள். மற்றொருவர் உங்களைச் சந்தித்திருக்கிறேன் என்றார். அவரையும் தேநீருக்கு அழைத்தீர்கள். உங்கள் போக்கு எனக்குப் பிடிபடவில்லை சுவாமி!" என்றார்.

அதைக் கேட்ட ஞானி ஜோசு சிரித்தவண்ணம் சொன்னார்.

"நீங்கள் இன்னும் இங்குதான் இருக்கிறீர்களா?"

"ஆம் சுவாமி!"

"ஆ! அப்படியானால் வாருங்கள்! கொஞ்சம் தேனீர் அருந்துங்கள்!" என்றார்.

கதையைக் கவனியுங்கள்! நாம் இன்றிருக்கிறோம். இங்கிருக்கிறோம். அதை உணர்ந்து இன்றைய நாளை இனிமையாக, பயனுள்ளதாக - கழிப்பது நல்லதா அல்லது எனக்கு 'பைபாஸ்' வைத்திருக்கிறார்களே. எனக்குப் புற்று நோய் இருக்கிறதே. எனக்கு

இவ்வளவு பிரச்னைகள் நாளைக்கு தலைக்கு மேல் இருக்கின்றனவே என்று புலம்பி, ஆழ்ந்து அமிழ்ந்து போவது நல்லதா?

எதை வேண்டுமானாலும் நாம் செய்யலாம்!

இரண்டும் நம் கையில்தான் இருக்கிறது.

சொல்லப்போனால் அமெரிக்கர்களும் அப்படித் தான். "இப்போது இங்கே இருக்கிறாய்" என்கிற தலைப்பில் பாபா ராம்தாஸ் என்ற ஹார்வர்டு பல்கலைக்கழகத்தின் முன்னாள் மன இயல் பேராசிரியர் ஒரு புத்தகம் எழுதி இருக்கிறார்.

இந்தத் தத்துவம், தலையில் அறைவது போல, நம் செயலைத் தூண்டுகிறது.

"அனுபவி ராஜா அனுபவி!" என்று வாழ்க்கை யைப் பற்றிப் போதிக்கிறது.

ஜப்பானியர்கள் தங்கள் பழமையையும் மறப்பதில்லை. பிடிவாதமாக அதற்குத் தரவேண்டிய மதிப்பைத் தருகிறார்கள். தங்கள் நாட்டு அரசனை தெய்வமாகவே போற்றி வருகிறார்கள். அந்தப் பழமையான பண்பாட்டைப் போற்றும்போது அந்தப் பழமை அவர்களைப் பாதிப்பதில்லை. ஜப்பானியர் கள் கடுமையான செயலுக்கு, உழைப்பிற்கு பெயர் பெற்றவர்கள். உழைப்பிற்குப் பின்தான் ஆசைகள், அனுபவங்கள், கெய்ஷாக்கள்! ராஜ பக்தி எல்லாம்.

நவீன விஞ்ஞானத் துறைகளை எடுத்துக்கொண் டால் அதில் தங்களுக்கு முன் அனுபவமில்லையே என்று அவர்கள் முனகுவதில்லை.

சேர சோழ பாண்டியர்களது காலத்தில் வாழ விரும்பி பஸ்களுக்குப் பெயர் மாற்றம் செய்வதுடன் திருப்தி அடைந்துவிடுவதில்லை.

வள்ளுவர் மாடம், பூம்புகார் கூடம் என்று பழமையைப் போற்றுவதிலேயே நிகழ் காலத்தை வீணடிப்பதில்லை.

பழமை தமிழகத்தின் சிந்தனையில் எத்தனை பெரிய பகுதியை ஆக்கிரமித்து நிகழ் காலத்தைக் கோட்டைவிடச் செய்கிறது என்பதை ஒரு கணம் எண்ணிப் பாருங்கள்.

ஜப்பானியர்கள் என்ன, பாரம்பரியம் இல்லாத சமுதாயமா?

பழம் பெருமை இல்லாத நாடா? ஏன் அவர்கள் அதில் காலம் கழிப்பதில்லை? நாம் ஒரு கணம் அதைப்பற்றி சிந்திக்க வேண்டும்.

"முடியுமா முடியாதா? என்பதைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. இன்று என்ன செய்ய வேண்டும் என்பதை எண்ணி அதில் கவனம் செலுத்துகிறார்கள். அதே சமயத்தில் எதிர்காலம் பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை என்று எண்ணிவிட வேண்டாம். எதிர்காலம் பற்றியும் சிந்திக்கிறார்கள்.

அதற்கு இன்று நாம் என்ன செய்யவேண்டும் என்று செயல்படுகிறார்கள். எதிர்காலம் கூட நிகழ் காலமாக அங்கே மாறிவிடுகிறது.

என்னென்ன பெருட்களின் ஆராய்ச்சியில் இன்று கவனம் செலுத்தினால் நாளை அந்தத் துறைகளிலே புதிய பொருட்களைக் கண்டுபிடித்து

இன்னும் பத்துப் பதினைந்து ஆண்டுகளில் அவற்றை வெளி நாட்டிற்கு விற்கலாம் என்பதுபற்றி இன்று திட்டமிடுகிறார்கள். ஆராய்ச்சி மேற்கொண்டு செய்யும் தங்கள் தொழில்களில் அவர்கள் காட்டும் திறமை மகத்தானது.

அவர்களுடைய தொழில் துறை சாத்திரத்தின் அடிப்படையைப் பாருங்கள்.

அவர்களுடைய தொழில் துறை நிர்வாக முறையை - நிர்வாக அணுகு முறை சாத்திரத்தையும் கூர்ந்து பாருங்கள். அதுதான் அவர்களை உலகில் தலைதூக்கி நிற்கச் செய்கிறது.

'அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்' என்பார்கள்.

'தலைவனுடைய உதாரணத்தைத்தான் மக்கள் பின்பற்றுகிறார்கள்.

'ஊழலில்லாத நாடு வேண்டும் என்று ஒரு புறம் சொல்லிக்கொண்டு மறுபுறம் ஊழலில் தலைவன் ஈடுபடுவானானால் பொதுமக்கள் அவனை மதிக்க மாட்டார்கள்.

நாடு பூராவும் ஊழல் மலிந்து விடும்போது மக்கள் ஒரு நாள் ஊழலைக் கண்டு பிடித்துவிடுவார்கள். அவனைத் தண்டிப்பார்கள்.

அதேபோல தன் ஒழுக்கமில்லாத தலைவன் உயர் ஒழுக்கங்களைப் பற்றிப் பேசமுடியாது.

தலைவனுடைய ஒழுக்கம்தான் நாட்டிலும் அல்லது ஒரு நிறுவனத்திலும் மலரும்.

இதை ஜப்பானிய நிர்வாகம் நன்கு உணர்ந்திருக் கிறது.

அது மட்டுமல்ல, உணர்ந்திருப்பதை செயல் படுத்துகிறது. ஒரு கம்பெனி பொய்யாக விளம்பரப் படுத்தி ஒரு பொருளை விற்றார்கள் என்ற செய்தி பத்திரிகையில் வெளியாயிற்று.

அந்த நிறுவனத்தின் தலைவர், "அப்படி நிகழ்வதற்கு யார் காரணம்? எந்தப் பிரிவு அப்படிப் பொருளை விற்றது? யார் இப்படி ஏமாற்றி விளம்பரம் செய்தார்கள்?" என்று ஆராய்ந்து அவர்கள் மீது பழியைப் போடவில்லை.

தாமே அதன் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு ராஜினாமா செய்தார். உண்மை என்ன? அவருக்குத் தெரியாமலேயே இத்தகைய தில்லு முல்லுகள் அந்த நிறுவனத்தில் நடந்தன.

இதைக் கண்டதும் பொதுமக்கள் அந்தக் கம்பெனியின் தலைவனுக்காக வருந்தினார்கள். அதே சமயம் அவரது நேர்மையைப் பாராட்டினார்கள். இதுதான் ஜப்பானிய நிர்வாக சாத்திரம்.

ஜப்பானிய பிரதமர் டக்கஷிட்டா 'ரெக்ரூட்' ஊழல் என்ற ஊழலில் சிக்கிக்கொண்டார்.

அதாவது ரெக்ரூட் என்ற நிறுவனம் சில பங்குகளைப் பொது மக்களிடம் விற்றது. பங்கின் விலையை அதிகமாக்குவதற்காகப் பல தவறான வழிகளை உபயோகித்து விலைகளை ஏற்றியது.

அதுவே அந்த நிறுவனத்தின் காரியதரிசியின் தற்கொலைக்குக் காரணமாயிற்று.

நிறுவனங்களிலும் சரி, ஆட்சியிலும் சரி தலைவர்கள் பொறுப்பேற்கிறார்கள். பொறுப்புக் களைத் தட்டிக் கழிப்பதில்லை.

யார் பேரிலாவது குற்றத்தைச் சுமத்திவிட்டு நாம் தப்பிக்கலாம் என்று குற்றம் சுமத்த ஆள் தேடுவதில்லை அவர்கள்.

இதன் விளைவாக "என்னுடைய தவறுக்காக எனது நிறுவனத்தின் தலைவன் தண்டனையை அனுபவிக்கிறான். தலைமைப் பதவியைத் துறக்கிறான்" என்ற குற்ற உணர்வு பணியாளர்களை வாட்டுகிறது.

அவர்கள் என்றும் நேர்மையுடன் நடக்க முயல்கின்றனர்.

தங்கள் நிறுவனத்தைப் பற்றி, நேர்மையைப் பற்றிப் பெருமைப்படுகிறார்கள். இதுதான் ஜப்பானிய வணிக முறைப் பண்பாடு.

அமெரிக்காவில் "ஜெனரல் மோட்டார்ஸ்" என்ற பிரபல கார் கம்பெனியின் ஒரு காரைப்பற்றி "ஆபத்தான கார்" என்று ரால்ப் நேடர் என்ற ஒரு தனி மனிதர் ஒரு புத்தகம் எழுதினார்.

இதனால் ஜெனரல் மோட்டார்ஸில் அந்தக் காரின் வியாபாரம் படுத்தது. அந்த நிறுவனத்தின் புகழ் பாதிக்கப்பட்டது.

இதை உணர்ந்த நிறுவனம் ரால்ப்நேடரை ஒரு "கேவலமான மனிதன், நம்பத்தகாதவன், பொய்யாக எழுதுகிறான்" என்ற ஒரு அபிப்ராயத்தைப் பொது மக்களிடையே உருவாக்க கீழ்த்தரமான தந்திரங் களைக் கையாண்டது.

அந்தத் தந்திரங்களையும் ரால்ப்நேடர் அம்பலப்படுத்தினார்.

பத்திரிகைகள் ரால்ப்நேடரின் நேர்மையைப் பற்றி விரிவாக எழுதின. இதன் விளைவாக ஜெனரல் மோட்டார்ஸ் கம்பெனியின் தலைவர் "இப்படிக் கீழ்த்தரமாக தங்கள் நிறுவனம் நடந்து கொண்டதற்கு மன்னிப்பு கேட்டார்."

ரால்ப் நேடருக்கு நஷ்ட ஈடு கொடுத்தார்கள்.

கவனியுங்கள், அமெரிக்க கார் கம்பெனியின் தலைவர் தன் தவறை உணர்ந்தார். மன்னிப்புக் கேட்டார். ஆனால் அவர் ராஜினாமா செய்யவில்லை.

இதற்கு மாறாக லட்சக்கணக்கில் சம்பளம் பெறும் ஜப்பானிய கம்பெனிகளின் தலைவர்கள் மானம் பெரிது என்றெண்ணி, தலைவன் ஒரு உதாரணமாக இருக்க வேண்டும் என்றெண்ணி ராஜினாமா செய்கிறார்கள்.

ஒரே சம்பவம், ஊழல், இவ்விஷயம் எப்படி வெவ்வேறு நாடுகளில் கையாளப்படுகிறது பாருங்கள்.

ஜப்பானில் மானம் கருதி ராஜினாமா செய்கிறார்கள்.

அமெரிக்காவில் மன்னிப்பு கேட்கிறார்கள்.

இந்தியாவில்??

ஜப்பானிய தனிமனித வளர்ச்சிக்கு அவர்களது உழைப்பு, நாணயம், நேர்மை எல்லாம் முக்கியமான காரணங்கள்.

சமுதாய வாழ்வில் இதை எல்லாம் எடுத்துக்காட்டுகிற அளவுக்கு ஜப்பானியத் தலைவர்கள் ஒரு உதாரணமாக வாழ்ந்து காட்டுவது தான் முக்கிய காரணம்.

உங்கள் நிறுவனத்தை உயர்த்த நீங்கள் முதலில் உதாரணமாக வாழ்ந்து காட்டுங்கள்.

தலைமை ஒரு அரிய வாய்ப்பு. நிறுவனத்திலுள்ள எல்லோரையும் உருவாக்குவதற்கு ஒரு அரிய வாய்ப்பு.

ஒரு நாட்டையும் அதன் எதிர்காலத்தையும் உயர்த்துவதற்கு மக்களைச் செயல்பட செய்யும் சரியான வழியும் இதுதான்.

இந்தியாவின் தண்ணீர்ப் பஞ்சத்தைப்பற்றி உலக வங்கி எச்சரிக்கிறது. அதுபற்றி "நதிகளை உடனே தேசியமயமாக்கினால்தான் நாடு பிழைக்கும்" என்று தெளிவாக அறிக்கை சமர்ப்பித்திருக்கிறது.

நம் நாட்டுத் தலைமையில் இதைப்பற்றி ஏதேனும் திட்டம் உண்டா? எதிர்கால மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதில் நம் நாட்டை ஆளும் தலைவர்களுக்குக் கவலை உண்டா?

எப்படி நம் போக்கு என்பதைக் கொஞ்சம் ஜப்பானுடன் வேறு வழிகளிலும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

ஜப்பானில் இன்று கம்ப்யூட்டர், எலக்ட்ரானிக்ஸ், மற்றும் எரிபொருள், அதிமின் ஓட்டம், உயிரியல் தொழில் துறை என்ற துறைகளிலே எதிர்காலத்திற்காக திட்டமிட்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இது பத்து பதினோரு ஆண்டுகளுக்கு முன்.

அப்போது இந்தியாவில் நாம் என்ன செய்தோம்?

அப்போது இருந்த பிரதமரை ஒரு பெரிய தொழில் கோட்டத்தைத் துவங்க தமிழ் நாட்டிற்கு

அழைக்கவில்லை. ஏதோ ஒரு சிலையைத் திறந்து வைக்க அழைத்தோம்.

ஒவ்வொரு முறையும் சிலை வைக்கவோ, பஸ் நிலையத்துக்கும், ரயில் நிலையத்துக்கும், விமான நிலையத்துக்கும் பெயர் வைக்கவோதான் நமது பிரதமர்கள் அழைக்கப்படுகிறார்கள்.

ஜப்பானியர்கள் முன்னோக்கிப் பார்க்கிறார்கள். நாம் ஆயிரம் ஆண்டுகள் பின்னோக்கிப் பார்க்கிறோம். அதிலும் நம் பண்பாட்டை உலகுக்கு அறிவுக்கும் பார்வை இல்லை.

அங்கிருந்து நிகழ் காலத்திற்கு வருவது எப்போ? எதிர்காலத்திற்குப் போவது எப்போது?

நாம் பழங்காலத்தை மென்று, பழம் பெருமையில் அரையும் குறையுமாகத் தவறாக வாழ்ந்து, நம்மையும் தமிழ் மக்களையும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறோமா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இத்தகைய மனப்போக்கு கொண்ட தமிழ் நாடு எங்கே செல்லும் என்று அறிய நாம் சோதிடரை நாடிப் போக வேண்டியதில்லை.

நாம் நிகழ் காலத்தில் வாழ உழைக்க - என்று கற்றுக் கொள்ள போகிறோம்?

எதிர்காலத்தை எண்ணி திட்டமிட, செயல்பட எப்போது தீவிரமாக இறங்கப் போகிறோம்?

வருங்காலத்தை நிகழ்காலமாகச் செயல்படுத்த என்று உழைக்கப் போகிறோம்?

4

ஜப்பானிய தொழில் பண்பாடு

ஜப்பானியர்களைப் பற்றி நிறைய பாராட்டி சொல்லலாம்.

அதே சமயம் அவர்களிடையே உள்ள குறைபாடுகளையும் அதன் காரணத்தையும் தெளிவு படுத்தவில்லை என்றால், நமது சமுதாயப் பார்வை நிறைவு பெறாது. அது ஒருதலைப்பட்சமாக அமையும்.

ஜப்பானிய நாட்டில் குடி இருக்க யாருக்கும் உரிமை வழங்குவதில்லை ஜப்பானிய அரசாங்கம்.

கிட்டத்தட்ட ஏழு லட்சம் கொரியர்கள் மூன்று தலைமுறைகளாக அங்கே வாழ்கிறார்கள். அத்தனை பேரும் வேலை செய்வதற்காக இறக்குமதி செய்யப் பட்டவர்கள்.

ஜப்பானிய அரசாங்கம் அவர்களுக்குக் குடி உரிமை வழங்கவில்லை. மாறாக அவர்களை இன்றும் மட்டமாகத்தான் கருதி, பழகுகிறார்கள்.

ஜப்பானியர்களுக்குத் தாங்கள் "ஒரு கலப்பில்லாத உயர் சமுதாயம்" என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை. அமெரிக்க நாட்டிலோ யாரும் குடியேறலாம்! நிலம் வாங்கலாம்!

அதே போல சில உள்நோக்கம் கொண்ட வியாபார தந்திரங்களை ஜப்பானியர்கள் கையாளுகிறார்கள்.

ஜப்பானில் ஒரு பொருளின் விலை அமெரிக்காவில் விற்பதை விட 70 சதம் அதிகம்.

அமெரிக்கர்களுடன் விலையில் போட்டி போட வேண்டுமென்று ஜப்பானிய அரசாங்கம் சலுகைகளைப் பெற்று அமெரிக்க நாட்டில் தங்கள் பொருட்களைக் குறைந்த விலைக்கு விற்கிறார்கள்.

இதன்மூலம் ஜப்பானியப் பொருள் விற்பனையில் ஜப்பானியத் தொழிலாளிக்கு வேலை கிடைக்கிறது, ஜப்பானிய நாட்டுக்குப் பணம் வருகிறது - என்ற எண்ணம் நிலவுகிறது.

நாவிதர் கடையில் நாம் உட்காரும் நாற்காலியை ஜப்பானியர்கள் குறைந்த விலையில் அமெரிக்காவில் விற்று வருகிறார்கள். அதனால் இன்று நாவிதர் நாற்காலி செய்யும் அமெரிக்க கம்பெனி மூடப்பட்டு விட்டது.

அமெரிக்க நாட்டில் அதிகம் விளையும் அரிசியையோ, ஆரஞ்சு பழத்தையோ ஜப்பானியர் தங்கள் நாட்டில் இறக்குமதி செய்ய மறுக்கிறார்கள். காரணம் இதன்மூலம் ஜப்பானிய விவசாயி பாதிக்கப்படுவான் என்கிற பயம் அரசியல்வாதிகளை விரட்டுகிறது!

அதாவது ஜப்பானியர்களின் செயல்களை - அவற்றிதன் உள் அர்த்தங்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஜப்பானியர்களுடன் நாம் ஒரு வியாபார பேரம் பேசும்போது "ஆ... சோ!" என்று அடிக்கடி தலையைக் குனிந்து குனிந்து ஆட்டுவார்கள்.

ஏதோ நாம் சொல்கிற எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டதாக நமக்குப்படும். அது உண்மையல்ல.

பின்னால் தீர விசாரித்துவிட்டு, கலந்து பேச வேண்டியவர்களுடன் கலந்து பேசிவிட்டுதான், அவர்கள் தங்கள் முடிவைத் தெரிவிப்பார்கள்.

அவர்களிடம் ஒரு தொழில் நுட்பம் இருக்கிறதென்றால் அவர்கள் அதைச் சொல்லிக் கொடுத்து விடமாட்டார்கள்.

ஜப்பானியர்களிடம் இருந்து நாம் அதைப் பணம் கொடுத்து வாங்கி விடவும் முடியாது.

அமெரிக்கர்களோ, ஜெர்மானியர்களோ, பிரெஞ்சுக்காரர்களோ அதே தொழில் நுட்பத்தை நம்மிடம் விற்பார்கள்.

இந்த வாய்ப்பு இருப்பதால்தான் ஜப்பானியர்கள் நம்மிடம் பேரம் பேச வருவார்கள்.

ஜப்பானியர்களோடு அமெரிக்கர்களை ஒப்பிடும் போது அமெரிக்கர்கள் மிக தாராளமானவர்கள் என்றே சொல்ல வேண்டும்.

ஜப்பானியர்கள் மேலே தெரிகிற அளவை விட ஆழம் நிறைந்தவர்கள். எதையும் தீர்க்கமாக உள்நோக்குடன் சிந்தித்து செயல்படுபவர்கள்.

அந்த உள்நோக்கம் நியாயங்களை, உண்மை களை, மீறாத உள்நோக்கம்.

ஒருமுறை யாருக்காவது 'வாக்கு' கொடுத்து விட்டால் அதைக் கடைசி வரையில் காப்பாற்று வார்கள்.

ஜப்பானில் வழங்கும் சென் புத்தமதக் கதைகள் எல்லாம் இந்த ஆழமான அனுபவத்தின் பிரதி பலிப்புதான்.

அதே போல ஹைக்கூ என்று சொல்லப்படும் மூன்று நான்கு வரிக் கவிதையிலும் ஒரு ஆழத்தையும் ஒரு திருப்பத்தையும் காணலாம்.

சென் கதைகள், ஹைக்கூ கவிதைகள் என்ற இரண்டையும் ஆராய்ந்தோமானால் அவை எப்படி ஆக்க சக்தி படைத்த மனத்தின் பிரதிபலிப்பு என்பதையும் உணரலாம்.

மேற்கு நாட்டு தர்க்கவாத அறிவைத் தாண்டி காரண காரியங்கள் காட்டி விஷயங்களைப் புரிந்து கொள்ளும் முறையைக் கடந்து - அதற்கப்பால் செல்லும் ஒரு அபூர்வமான தன்மையை அங்கே காணலாம்.

ஜப்பானிய மனோபாவத்தைப் பற்றிப் பேசும் அமெரிக்கப் பேராசிரியர்களும், தொழில்வல்லுனர் களும் அவர்கள் கூட்டுணர்வுடன் செயல்படுபதை யும், அவர்களது கட்டுப்பாட்டையும் விரிவாகப் பேசுகிறார்கள், ஆராய்கிறார்கள்.

இந்தக் கூட்டுணர்வும் (Teamwork) கட்டுப்பாடும் (Discipline) நடைமுறை விஷயங்கள்.

இந்த நடைமுறை விஷயங்களுக்கு மூலகாரண மாக இருப்பது அவர்கள் தங்கள் ஆக்க சக்தி படைத்த மனத்துடன் ஒன்றிச் செயல்படுவதுதான்.

ஆக்க சக்தி படைத்த மனத்துடன் ஒன்றிச் செயல்படும்போது இந்தப் பிரபஞ்சம் எப்படி ஒரு லயத்துடன் செயல்படுகிறது என்பதும் - எப்படி தியானம் செய்யும்போது மூலாதாரத்தைத் தொடு கிறோம் என்பதும் புரிகிறது.

திரும்பத் திரும்ப நமக்கு வேண்டிய கட்டுப் பாட்டையும், எல்லாம் சேர்ந்து இயங்கும் ஒரு பிரபஞ்ச கூட்டுச் செயல்பாட்டையும் தெரிவிக்கிறது.

இதை இன்று 'டாவ்' (TAU) என்ற ஜப்பானிய வார்த்தையால் அழைக்கிறார்கள்.

'பௌதிகத்தில் டாவ்' என்றும் 'நிர்வாகத்தில் டாவ்' என்றும் பல தலைப்புக்களில் ஆக்க சக்தி படைத்த மனத்தை உபயோகித்து வாழ்க்கை நடத்த வேண்டிய அவசியத்தை அமெரிக்க நாட்டு பௌதிக இயல் பேராசிரியர்களும் நிர்வாக இயல் நிபுணர்களும் இன்று அடிக்கடி குறிப்பிடுகிறார்கள்.

"சுயநலமில்லாத மனிதனில்லை" என்னும் விஷயத்தை நாம் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும்.

"எந்த ஜீவனும் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள முயல்கிறது" என்ற அடிப்படைத் தத்துவத்தை உணர்ந்து நாம் பேரம் பேசத் துவங்கினோமானால் நாம் வருத்தப்பட மாட்டோம். விரக்தியடைய மாட்டோம்.

நம் வளர்ச்சிக்கு "இந்த அறிவு தேவை."

"இந்த அடிப்படை உண்மையை என்று நாம் உணர்கிறோமோ அன்றே முன்னேற்றத்தின் முதல்

படியில் காலடி எடுத்து வைத்து விட்டோம் என்று நம்பலாம்.

ஜப்பானில் போற்றப்படும் ஆக்க சக்தி படைத்த மனத்தை உபயோகிக்கும் வழிமுறைகள் நமக்குத் தேவை -

ஒரு கூட்டுணர்வோடு செயல்படும் சமுதாய உணர்வு, நமக்குத் தேவை -

"ஒரு கட்டுப்பாடுடன் தனிமனிதன் வாழ்வையும், சமுதாய வாழ்வையும் நாம் அமைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்" என்பவற்றை நாம் உணர வேண்டும்.

பிறகு அந்த வழிமுறைகளை நமது வாழ்க்கை நெறிகளாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

பலர் சொல்கிறார்கள்: "இது ஜப்பானியப் பண்பாடு" என்று.

இன்று அது ஜப்பானியப் பண்பாடாக, நாகரிகமாக இருக்கலாம்.

"அது நம் நாட்டுக்குத் தேவை!" என்று உணர்ந்து அமெரிக்கர்கள் அதைப் புரிந்து கொள்ள, புத்தகம் எழுதுகிறார்கள். அதைப் பாடமாக சொல்லிக் கொடுக்கிறார்கள்.

உலக நிலைமை அப்படி இருக்கும்போது நாம் என்ன செய்கிறோம்?

அரசியல் தரும் ஆணவமும், அதிகார போதையும், சினிமா தரும் மோகமும், 'செக்சு'ம்தான் இன்றைய முக்கியமான விஷயங்களாக பொது வாழ்வுச்

சிந்தனைகளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன - நம் நாட்டில்.

முன்னேறுகிற சமுதாயங்களைப் பார்த்து நாம் முன்னேறக் கற்றுக் கொள்ள வேண்டும்.

புத்தமதம் ஒரு காலத்தில் இந்தியாவிலிருந்துதான் ஜப்பானுக்குச் சென்றது.

அமெரிக்க நிர்வாக இயல்தான் அமெரிக்காவிலிருந்து 30 ஆண்டுகளுக்கு முன் ஜப்பானுக்குச் சென்றது.

இன்று ஜப்பானிய நிர்வாக இயலை அமெரிக்கர்கள் படிக்கிறார்கள்!

நாம் காலந்தாழ்த்தாது, ஜப்பானியப் பண்பாட்டை, நாகரீகத்தை - ஜப்பானிய மனோபாவங்களை வாழ்க்கை நெறிகளாக நம் சமுதாயத்தில் ஏற்க வேண்டும், வளர்க்க வேண்டும்.

இதில் 'கம்பசித்திரம்' ஏதுமில்லை.

இன்று ஜப்பானியர்கள் பெரும் முதல் போட்டு கார் உற்பத்தி செய்யும் கம்பெனிகளை அமெரிக்க நாட்டில் துவங்கி இருக்கிறார்கள். தொழிற் சாலை அமெரிக்காவில்! வேலை செய்பவர்கள் அமெரிக்கர்கள்!

"குறைபாடில்லாத பொருட்களை எப்படி உற்பத்தி செய்வது? கூட்டுணர்வுடன் செயல்படுவது எப்படி? என்பதைக் கற்றுக் கொள்ள அமெரிக்கத் தொழிலாளர்களை ஒரு ஆறு வார காலம் ஜப்பானுக்கு அனுப்புகிறார்கள். பின் அதே

முறைப்படி அருமையான ஜப்பானியக் கார்கள் இங்கு உற்பத்தி ஆகின்றன.

அதாவது இப்போது ஜப்பானியப் பண்பாடு, நாகரீகம் - அணுகுமுறை - அமெரிக்க நடைமுறை யாகி வருகிறது!

1982 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் ஹாண்டா கார் கம்பெனி ஆயிரம் கார்களை உற்பத்தி செய்தார்கள். இன்று பத்து லட்சம் கார்கள் உற்பத்தி யாகின்றன.

ஹாண்டா கார் கம்பெனியில் இந்த ஆண்டு 12,000 புதிய தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்காவின் மிகப் பெரிய கார் கம்பெனியான ஜெனரல் மோட்டார்ஸில் கடந்த சில ஆண்டுகளில் இரண்டு லட்சம் பேரை வீட்டுக்கனுப் பினார்கள் - வியாபாரம் இல்லாததால்!

நாம் இந்த அடிப்படை ஜப்பானியத் தொழில் அணுகுமுறையைப் பற்றிய உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும்! செயல்பட வேண்டும்.

5

ஜப்பானிய தாய் தத்துவம்

தாயுணர்வு ஜப்பானியரின் அன்றாட வாழ்வில் பரந்து கிடக்கிறது.

இந்தியாவுக்கு வரும் வழியில் ஜப்பானில் நான் இறங்கினேன்.

இந்தியாவுக்கு எடுத்துக் கொண்டு வரும் பெரிய பெட்டிகளுடன் ஜப்பான் விமான நிலையத்தில் நின்றேன்.

என் டிக்கெட்டுகளை வேறு கம்பெனி விமானத்தில் செல்வதற்கு மாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அந்த 'ஏர்லைன்ஸ்' நிறுவனத்தின் அலுவலகம் அருகிலுள்ள வேறு ஒரு கட்டிடத்தில் இருப்பதாகக் கூறினார்கள்.

எல்லாப் பெட்டிகளையும் நானோ போர்ட்டரோ தூக்கிக் கொண்டு அடுத்த கட்டிடத்திற்குப் போவது என்பது சாத்தியமல்ல.

அங்கே விட்டுவிட்டுச் செல்வதற்கோ ஆள் காவலுக்கு - என்னுடன் வந்தவர்கள் - எனக்குத் தெரிந்தவர்கள் - அங்கே யாரும் இல்லை.

இந்த நிலையில் பெட்டிகளைச் சோதிக்கும் அதிகாரியைப் பார்த்து என் இக்கட்டான நிலையைச் சொல்லி அதை அவர் பார்த்துக் கொள்ள முடியுமா என்று கேட்டேன்.

ஹாலின் எதிர்ப்புறத்தைக் காட்டி, "அங்கே விட்டுவிட்டுச் செல்லுங்கள்" என்றார் அவர்.

அதுவோ ஜனப் போக்குவரத்து அதிகம் உள்ள இடம்.

எனக்கு "நம் பெட்டி பத்திரமாக இருக்குமா, யாராவது எடுத்துக் கொண்டு போய்விட்டால் என்ன செய்வது?" என்ற பலமான யோசனைகள்.

என் கவலையை உணர்ந்த அந்த அதிகாரி கூறினார்:

"எதிரே நான் சொன்ன இடத்துக்கு அருகே இருப்பவை விமானம் ஓட்டும் பைலட்டுகளுடைய பெட்டிகள்தான்.

"அவர்கள் அங்கே தான் விட்டு விட்டுப் போயிருக்கிறார்கள். பத்திரமாக இருக்கும். கவலைப் படாதீர்கள்" என்றார்.

அச்சத்தை மனத்தில் சுமந்து, நான் அவர் சொன்ன பேச்சைக் கேட்டு அடுத்த மாடிக் கட்டிடத்திற்கு டிக்கெட் மாற்றச் சென்றேன்.

பல இடங்களுக்குச் செல்லவும், ஏறி இறங்கவும் வேண்டியிருந்தது.

சுமார் இரண்டு மணி நேரம் கழித்து மீண்டும் வந்தேன்.

நீங்கள் நம்பமாட்டீர்கள், என் பெட்டி அங்கே பத்திரமாக இருந்தது!

ஜப்பானில் வெளியே செல்லும்போது, டாக்சியில் ஒரு பொருளை இழந்து விட்டு போலீசில் அதுபற்றி 'ரிப்போர்ட்' செய்தீர்களானால் அவர்கள் கூறுவார்கள்: 'கவலைப்படாதீர்கள். உங்கள் வண்டியின் டிரைவர் அதை அருகிலுள்ள எந்த போலீஸ் நிலையத்திலாவது ஒப்படைத்திருப்பார். விரைவில் செய்திவரும்' என்று கூறுவார்.

அதேபோல அன்றோ மறு நாளோ உங்கள் பொருளை நீங்கள் வசூலித்துக் கொள்ளலாம்.

அவர்களது சிந்தனையில், செயலில், பொது வாழ்வில் ஒரு நாணயம் நிலவுகிறது.

அதன் மூலம் அவர்கள் வாழ்வின் அடிப்படை விஷயங்களைத் தொடுகிறார்கள்.

அதாவது நமது குடும்பத்தில் உள்ள ஒருவரது பொருளை மற்றவர்கள் திருடுவதில்லை. அத்தகைய குடும்பத்தில் விரிவாக்கமாகத்தான் ஜப்பானிய மக்கள் ஜப்பானிய சமுதாயத்தைக் கருதுகிறார்கள்.

ஜப்பானிய சமுதாயம் ஒரு பெரிய ஜப்பானியக் குடும்பம். அவ்வளவுதான்.

இது எத்தகைய உயர்வான கொள்கை, இது எப்படி பல நல்ல பலன்களைத் தருகிறது என்பதை நாம் ஆழ்ந்து யோசிக்க வேண்டும்.

இத்துடன் நமது ஊர் விஷயம் ஒன்றைப் பாருங்கள்.

சமீபத்தில் நமது நாட்டு தூதுவராக இருந்த மெஹ்ரோத்ரா ஜப்பானில் தனது அனுபவங்களை எழுதுகிறார்.

"ஜப்பான் நாடு நமது ஊரிலிருந்து நிறைய உப்பு வாங்கிக் கொண்டிருந்தது. ஒரு சமயம் இந்தியா விலிருந்து வந்த உப்பு தரக்குறைவாக இருந்தது."

"உப்பில்லாத கறுப்புக் கட்டிகளும், மண்ணும் கலந்திருந்தன."

"என்னைச் சோதித்துப் பார்க்கச் சொன்னார்கள்."

"இந்தியத் தூதுவர் என்ற முறையில் நான் சோதித்து தரம் குறைவாக இருப்பதாக சர்டிபிகேட் கொடுத்தேன்."

"நியாயமாக இதற்கான தொகையை இந்திய கம்பெனி தள்ளுபடி செய்திருக்க வேண்டும்."

இந்திய கம்பெனி மறுத்துவிட்டது.

"இதன் விளைவாக ஜப்பானியர்கள் இந்தியா விலிருந்து உப்பு இறக்குமதியை நிறுத்திவிட்டார்கள்.

இதனால் இந்தியாவுக்கு ஆண்டுதோறும் கோடிக்கணக்கில் நஷ்டம் — இப்படி தன் அனுபவங்களை எழுதி இருக்கிறார் நம் தூதுவர்.

இன்றைய லாபம்தான் நமது குறி. நாளைய வியாபாரம் பற்றி நாம் சிந்திப்பதில்லை.

அதைவிட அடிப்படை நியாய உணர்வு, நேர்மை, நம்மிடம் இல்லை என்பதைத் தான் இது பறை சாற்றுகிறது.

நமது நாட்டு மீனம்பாக்கம் விமான நிலையத்திலோ, தலைநகரிலுள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்திலோ, ஒரு பெட்டியை ஓரிடத்தில் விட்டுவிட்டு மறு கட்டிடத்திற்கு நாம் சென்று வர முடியுமா என்பதை யோசித்துப் பார்க்கும்போது நாம் ஏன் வளரவில்லை என்பது புரியும்.

நியாயம்தான் இந்த உலகை நிரந்தரமாக ஆட்சி செய்கிறது. அநியாயம் அல்ல, ஏமாற்று வேலை அல்ல.

ஒன்றை ஒன்று சார்ந்து இந்த பிரபஞ்சமும் பரஸ்பர நம்பிக்கையில் இந்த உலகமும் இயங்குகிறது.

ஒருவரை ஒருவர் வஞ்சித்து அல்ல, தன் சகாயத்தை மட்டுமே கருதுவதனால் அல்ல. இதை ஜப்பானிய சமுதாயம் உணர்ந்து கடைப்பிடிக்கிறது.

ஜப்பானியத் தொழில் வளர்ச்சியை எடுத்துக் கொள்ளுங்கள். ஜப்பானியர்கள் இதற்குமுன் கார் செய்ததில்லை. கார் உற்பத்தி செய்த அனுபவமில்லை. (நம்மைப் போலத்தான்)

"கார் செய்து அமெரிக்காவுடன் போட்டி போடுவதாவது? அமெரிக்கா பெரிய ராட்சச நாடாயிற்றே?" என்ற பயம், கவலை, அவர்களை சிறிதும் பாதிக்கவில்லை.

கார் செய்யவேண்டுமென்ற ஒரே நோக்கம் தான் கண்முன் இருந்தது. அதுதான் அன்றைய பிரச்சனையாக இருந்தது. செய்தார்கள், வெற்றி கண்டார்கள்.

அதேபோல கம்ப்யூட்டர், எலக்ட்ரானிக் தொழில்களில் எல்லாம் நுழைந்து வெற்றிக் கண்டார்கள்.

'பார்பர் ஷாப்'பின் நாற்காலி செய்வதிலிருந்து, இசைக் கருவியான பியானோ செய்வது வரை ஜப்பானியர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

அமெரிக்காவில் பார்பர் ஷாப் நாற்காலி தொழில், பியானோ கருவி செய்யும் தொழில் எல்லாம் நசித்து விட்டன!

மன இயல்புகளை ஆராய்பவர்கள் "நம் கவலை கடந்த கால நிகழ்ச்சிகளை மெல்லுவதால் ஏற்படுகிறது. நமது பயம் எதிர்காலம் இப்படி ஆகிவிடுமோ என்ற எண்ணங்களால் விளைகிறது.

"இதன் விளைவாக, கடந்த காலமும் எதிர்காலமும் நம் சிந்தனையை நிறைத்து விடுகின்றன. எனவே பெரும்பாலோர் நிகழ்காலத்தைக் கோட்டை விடுகிறார்கள்" என்று எழுதுகிறார்கள்.

இதைப் பூரணமாக உணர்ந்தவர்களாக ஜப்பானி யர்கள் செயல்படுகிறார்கள்.

நேற்று என்பது நடந்து போன விஷயம். சரித்திரத்தை நம்மால் திருப்ப முடியாது.

அதேபோல "நாளை" என்பது நம்மால் தீர்மானித்து கணிக்க முடியாத ஒரு சாசுவதமற்ற எதிர் காலம். ஒரு நிச்சயமற்ற தன்மை அத்துடன் ஒட்டிக் கொண்டிருக்கிறது.

"நாம் இன்று இங்கிருக்கிறோம் என்பதை உணர்ந்து உற்சாகமாக செயல்படும் இயல்பை ஜப்பானிய சமுதாயத்தில் காணமுடிகிறது.

இந்திய சமுதாயம் அல்லது தமிழ்ச் சமுதாயத்தைப் பற்றி எண்ணுபவர்கள், நமது கலாசார மனோபாவங்கள் என்ன, அது எப்படி நம் வாழ்வை - முன்னேற்றத்தை ஊக்குவிக்கிறது அல்லது தடை செய்கிறது என்பதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

நமது சமுதாயம் வளரவும் முன்னேறவும் வேண்டுமானால் பிற சமுதாயங்கள் எத்தகைய உயர் எண்ணங்களால், மனோபாவங்களால், பழக்கவழக்கங்களால், பண்பாட்டினால், உயர்ந்திருக்கின்றன என்று ஆராய்ந்து அவற்றை நாம் எங்கெல்லாம் உபயோகித்து முன்னேற முடியுமோ அங்கெல்லாம் உபயோகிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

சம்பிரதாயம் என்ற தேவையற்ற சுமைகளை எல்லாம் இறக்கி வைத்துவிட்டு புதுமை, நன்மை, வளர்ச்சி என்ற புதிய காற்றையும், புதிய ஒளியையும், புதிய தண்ணீரையும் நாம் உள்ளே விடக் கற்றுக் கொள்ள வேண்டும்.

கடந்த 25 ஆண்டுகளில் மகத்தான சாதனைகளைப் புரிந்து உலகிலேயே ஒரு வல்லரசாக உயர்ந்து நிற்கும் ஜப்பானிடமிருந்து நாம் நிறைய கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது.

கற்றுக்கொள்வோமா?

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்." — பாரதி.

6

'காப்பி' அடியுங்கள்!

இந்தியாவைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்றால் "சாமியார்களும், யானைகளும், பாம்பாட்டி களும், பிச்சைக் காரர்களும் தான் நினைவுக்கு வருகின்றன" என்று ஒரு காலத்தில் வெளி நாட்டார் சொல்வார்கள்.

இன்று அந்த எண்ணம் ஓரளவு மாறி வருகிறது.

அதே போல ஜப்பான் என்றதும் நம் மனத்தில் எழும் எண்ணம், "எரிமலையும், நிலநடுக்கமும், கெய்ஷாப் பெண்ணும், கிமோனோ என்ற ஆடையும் தான்!"

இது ஒரு காலம்.

இன்றும் அங்கே பணிவிடை செய்யும் அழகிய கெய்ஷாப் பெண்கள் இருக்கிறார்கள்.

ஜப்பான் நாட்டின் பொருள் வளம்தான் நம் கண்ணைக் கவருகிறது.

ஜப்பானியரின் வியாபாரத் திறமை, தொழில் நுட்ப அறிவு - இவை தான் நம் சிந்தனையில் தேங்கி நம்மை பிரமிக்க வைக்கிறது.

ஒரு நாட்டுப் பொருள்களை வாங்கி மற்றொரு நாட்டில் விற்கும் வியாபாரத்தில், இன்று உலகிலே கொடி கட்டிப் பறப்பவர்கள் ஜப்பானியர்கள்.

ஜப்பானில் இப்படிப்பட்ட ஏராளமான வியாபார கம்பெனிகள் இருக்கின்றன.

பெரும் கம்பெனிகள் கிட்டத்தட்ட 70-80 நாடுகளில் வியாபாரத் தொடர்பு கொண்டிருக் கின்றன.

ஜப்பானிலுள்ள சின்ன கம்பெனிகள் கூட ஒரு 50 நாடுகளிலாவது தங்கள் வியாபாரத்தை நடத்துகின்றன.

வியாபாரம் எப்படிச் செய்கிறார்கள்?

உதாரணமாக ஆஸ்திரேலியாவில் உள்ள செம்மறியாட்டு ரோமத்தை அமெரிக்க டாலர் கொடுத்து வாங்குகிறார்கள்.

அதை ஹாங்காங்கில் சுத்தப்படுத்தி நூலாக்கு கிறார்கள்.

பின்னர் அதைக் கொரியாவுக்கு எடுத்துச் சென்று துணியாக ஆடையாக ஆக்குகிறார்கள்.

இந்த ஆடைகள் அமெரிக்காவிலும், ஐரோப்பா விலும் கடைகளில் விற்பனை ஆகின்றன!

கவனியுங்கள், ஜப்பானுக்குள் புகாமலே ஜப்பானியர்கள் ஒரு நாட்டுப் பொருளை மற்றொரு நாட்டுக்கு விற்று வியாபாரம் செய்து பணம் சம்பாதிக்கிறார்கள்!

இன்று உலகின் பெரிய வியாபார நிறுவனங்கள் அனைத்தும் ஜப்பான் நாட்டைச் சார்ந்தவை.

நம்முடைய நாட்டிலும், ஆஸ்திரேலியாவிலும் உள்ள இரும்பு தாதுப் பொருளை ஜப்பானி யர் வாங்குகிறார்கள்.

அதை ஜப்பானிலே உருக்கி இரும்புக் குழாய் செய்கிறார்கள்.

பிறகு அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் விற்கிறார்கள், ஜப்பானியர்கள்.

இப்படிச்செய்ய உலகின் 'நீக்குபோக்கு' தெரியவேண்டும்.

எது, எங்கே தேவை என்பதும், எது எங்கே அபரிமிதமாகக் கிடைக்கிறது என்பதும் தெரிய வேண்டும்.

வியாபாரம் செய்யும் செட்டியார் போல வியாபார அணுகுமுறை தெரியவேண்டும். மனித உறவுகளைப் பற்றிய அறிவு வேண்டும்.

"வியாபாரம் செய்வதை ஒரு கலையாக ஜப்பானியர்கள் வளர்த்திருக்கிறார்கள்.

இதைவிட முக்கியமாக ஜப்பானிய அரசாங்கம் வியாபார, தொழில் நிறுவனங்களுடன் தாங்களும் ஒருவராக நின்று உதவ வருகிறது.

ஜப்பானிய அரசாங்கம் தொழில் கொள்கையை வகுக்கிறது.

பல நிபுணர்களைக் கொண்டு உலக நிலவரத்தைக் கணிக்கிறது.

மக்கள் தேவைகளைப் புரிந்து கொள்கிறது:-

புதிய தொழில் நுட்பம் எங்கே கிடைக்கிறது என்பதைத் தெரிந்து வைத்திருக்கிறது.

இந்த அடிப்படையில் ஜப்பானிய அதிகாரிகள் உள்ளூர் தொழில் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு எதிர்காலத்திற்கு வேண்டிய துறைகளில் இறங்குகிறார்கள்.

அதாவது இணைந்து செயல்படுகிறார்கள். அப்படிச் செயல்படும் போதுதான் "நம்நாட்டிற்கு வருமானம் உண்டு; நமது ஊர்ப் பொருட்களை வெளிநாடுகளில் விற்க முடியும். இதனால் ஜப்பானிய தொழிலாளிக்கு வேலையும் ஊதியமும் கிடைக்கும்!" என்பதை நன்கு உணர்ந்திருக்கிறார்கள் அவர்கள்.

ஜப்பானில் ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன் இப்படி அரசாங்கமும் தொழில் நிறுவனங்களும் சேர்ந்து அடுத்த நூற்றாண்டில் எந்தத் தொழில் துறையில் நாம் கவனம் செலுத்த வேண்டுமென்று தீர்மானித்தன.

அவற்றின் ஆராய்ச்சியில் இறங்கிச் செயல்பட ஆரம்பித்து வருகின்றனர்.

நமது நாட்டில் அதிகாரிகள், தங்களை ஆளப்பிறந்த தனி இனமாக கருதுகிறார்கள்.

வியாபாரிகளை - தொழில் செய்பவர்களை - அதிகாரம் செய்கிறார்கள்.

"வாங்குகிற சம்பளத்திற்கு வேலை செய்ய வேண்டும்" என்பதை மறந்து ஏதோ சகாயம் செய்கிறோம் என்கிற நினைப்புடன் நடந்து கொள் கிறார்கள்.

அதைவிட வியாபாரியும், தொழிலதிபரும் "திருடர்கள், கொள்ளையடிப்பவர்கள், நிறைய லாபம் சேர்ப்பவர்கள்" என்கிற தவறான எண்ணம் அதிகாரிகளிடையே நம் நாட்டில் நிலவுகிறது.

அதாவது ஜப்பானில் அதிகாரிகள் தொழில் செய்பவர்களுக்கு உதவுபவர்களாக இருக்கிறார்கள்.

அமெரிக்காவில் கூட 65 மைல் வேகத்தில் செல்லும் லாரிகள் 70 மைல் வேகத்தில் பொருள்களை ஏற்றிச் செல்லும்போது:-

"நாட்டில் தொழில் ஓடிக்கொண்டிருக்கிறது! வேலை நடந்தாக வேண்டும்! நான் இதை நிறுத்தி தண்டனை விதிப்பது நியாயமாகாது" என்ற நினைப்பில் சிறு தவறுகளை எல்லாம் மன்னிக்கும் மனோபாவத்துடன் விஷயங்களை, காவல் துறையினர் அணுகுகிறார்கள். தொழிலுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

நம் நாட்டில், காவல் துறையும், பிற துறைகளும், எப்படிப்பட்ட அணுகுமுறைகளைக் கையாளு கிறார்கள் என்று எண்ணிப் பாருங்கள்!

இன்று, அமெரிக்க நாடு போல பல சிந்தனைக் குழுக்களை, நிபுணர் குழுக்களை பல இடங்களில் ஜப்பானியர்கள் நிறுவி இருக்கிறார்கள்.

இவர்களுக்கு 'சிந்திக்கும் வல்லுனர்கள்' (Intellectuals/Thinkers) என்றும் 'புத்திசாலிகளது கூட்டம்' (Brain Trust) 'அறிஞர் குழு' என்றும் –

இப்படிப் புகழ் பெற்ற பல்வேறு அமைப்புகள் இன்று ஜப்பானில் நிறைய இருக்கின்றன.

அரசாங்கத் துறைகளிலும் தனியார் நிறுவனங்களிலும் - இத்தகைய அமைப்புக்களைக் காணலாம்.

அமெரிக்காவில் இத்தகைய அமைப்புகள் பல ஆண்டுகளாக செயல்பட்டு பலனளித்து வருகின்றன.

புருக்கிங்ஸ் கழகம். அதே போல் ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்துக்கு சிந்தனைக்குழு இப்படிப் பல.

இதில் இருபதிலிருந்து நூறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் இருப்பார்கள்.

"அந்தந்த துறையிலும் என்ன நேர்ந்து கொண்டிருக்கிறது?" என்பதைத் அவர்கள் இரண்டு மாதத்திற்கொரு முறை கூடி விவாதிப்பார்கள்.

ஒரு அரசியல் பேராசிரியர் "ஒரு நாட்டில் அரசியல் நிலமை சுமுகமாகப் போய்க்கொண்டிருக்கிறதா? அல்லது புரட்சிகளால் பொருளாதாரம் சீர் குலைந்து வருகிறதா? என்பதை ஆராய்ந்து கூறுவார். பின் அந்த நாட்டில் பணத்தை முடக்கித் தொழிலைத் துவங்குவது நல்லதா இல்லையா என்பதை அறிவிப்பார்கள்.

தொழில் நுட்பம் பற்றி அந்தத் துறையில் ஏற்பட்டிருக்கும் புதிய கண்டுபிடிப்புகள் பற்றி அந்தத் தொழில் நிபுணர் கூறுவார்.

இத்தகைய அறிஞர் குழுக்களின் அறிக்கைகள் அதிக விலையில் நாடு பூராவும் தொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்படும்.

எப்படி திட்டமிட்டு, கூட்டாக நாட்டுக்காக செயல்படுகிறார்கள் என்பதைக் கவனியுங்கள்.

வியாபாரத்தைப் பார்த்தோம்; அறிஞர் குழுக்களைப் பற்றி அறிந்தோம்.

இதற்குக் கீழ் இருக்கும் மனித சக்தியைக் கவனியுங்கள்.

மனித உழைப்புதான் பொருளாக மாறுகிறது.

நமது ஊரில் வாரத்தில் 5 நாள் வேலை; அதாவது 40 மணி நேரம்.

அங்கே வாரத்திற்கு 44 மணி நேர வேலை.

இத்தனை நாள் 46 மணி நேரமாக இருந்தது. சமீபத்தில்தான் 2 மணி நேரம் குறைத்து 44 மணி நேரமாக்கி இருக்கிறார்கள்.

உழைப்பதில் - உழைக்கும் நேரத்திற்கீடான பலனை உற்பத்தி செய்வதில் பெருமை கொள்கிறார்கள்.

நெளுவெடுக்கும் மனோபாவத்தை, சோம்பலை அங்கே பார்க்க முடியாது.

ஆணும் பெண்ணும் உழைப்பதில் பெருமை கொள்ளும் இனமாக அவர்கள் உருவாகி இருக் கிறார்கள்.

இந்திய நாட்டில் 'சுகவாசி'களாக இருப்பதுதான் உயர்வு என்ற எண்ணம் பரவி இருக்கிறது.

அதுவும் குறிப்பாக, அரசாங்க அலுவலகங்களில் வேலை நடக்கும் அழகைப் பார்த்தோமானால் எப்படி நாம் கொடுக்கும் வரி விரயமாகிறது என்பது தெரியவரும்.

ஜப்பானில் எல்லா நிறுவனங்களிலும் அதிக நேரம் விவாதத்திற்காக எடுத்துக் கொள்ளப் படுகிறது

ஒரு நிறுவனத்தின் லட்சியம், அதற்கான அணுகுமுறை எல்லாம் எல்லோருக்கும் விளக்கப் படுகிறது.

ஒவ்வொருவரும் நிறுவனத்தின் முக்கியமான ஒரு பகுதியாகத் தங்களை எண்ணுகிறார்கள். அப்படியே பணிபுரிகிறார்கள்.

எல்லோரும் ஒன்றுகூடி ஒரு முடிவெடுத்து விட்டார்களானால் அங்கே மறு பேச்சில்லை.

எல்லோரும் அம்முடிவை ஏற்றுக் கொள் கிறார்கள். பின் செயல்படுகின்றனர்.

நமது ஊரில் மாறுபட்ட கருத்துள்ளவர்கள் தனிக் கும்பலாக ஒரு நிறுவனத்தில் பிளவு ஏற்படுத்துகிறார்கள்.

இதனால் செயல் தடைப்படுகிறது. நல்லெண்ண மும் கூட்டு மனப்பான்மையும் இல்லாததன் விளைவை இந்தியா அனுபவிக்கிறது.

இதைவிட வேடிக்கையான ஒரு நிகழ்ச்சி சமீபத்தில் ஜப்பானில் நடந்தது.

அமெரிக்கர்கள் சொன்னார்கள்: "உங்களுடைய கடைகளில் எங்கள் பொருட்களை விற்க முடியாதபடி பல சட்டதிட்டங்களைப் போட்டிருக்கிறீர்கள்; இது நியாயமல்ல.

"போட்டியை ஒழித்து ஒரு கம்பெனியே ஏகபோக வியாபாரம் செய்ய அனுமதிக்கிறீர்கள், இது தவறு.

"சாலை, மருத்துவமனை என்று பொதுக்காரியங்களில் நாட்டுக்காக பணம் நீங்கள் செலவழிப்பதில்லை!" என்று ஒரு 200 குறைகளை ஜப்பானைப் பற்றிச் சொன்னார்கள்.

ஜப்பான் நாட்டு வியாபாரத்தை சூப்பர் 301 திட்டப்படி - மேற்கூறிய காரணங்களுக்காக அமெரிக்கா தடுத்திருந்தது.

சகஜமாக இப்படி அமெரிக்கா சொல்லும்போது "இது எங்கள் ஊர் விஷயம். நீங்கள் தலையிட உரிமை இல்லை. உங்கள் வேலையைக் கவனியுங்கள்!" என்று தான் ஜப்பானியரும் எந்த நாட்டவரும் கூறி இருப்பார்கள்.

ஜப்பான் என்ன செய்தது?

ஜப்பான் சொன்னது; "அமெரிக்காவில் மக்களிடையே சேமிப்புப் பழக்கம் இல்லை. அதை வளருங்கள், கல்விக் கூடங்களின் தரம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். அதைக் கவனியுங்கள்.

"தொழில் நிறுவனங்கள் உடனடி லாபத்தைப் பார்த்து தொழில் செய்வது முட்டாள் தனம். நீண்டகால தொலை நோக்கில் தொழிலை அணுக கற்றுக் கொள்ளுங்கள்!" என்று பதில் உபதேசம் செய்தார்கள்!

இதன் விளைவாக ஜப்பான் மாறியது; அமெரிக்கா மாற ஒப்புக் கொண்டது. ஜப்பானிய மக்களுக்கும் நாட்டுக்கும் பல நன்மைகள் ஏற்பட்டன.

நன்மை அதிகமாக மக்களுக்குப் போய்ச்சேர வேண்டும் - தொழில் நிறுவனங்களுக்கு அடுத்தபடி

தான் - என்ற அணுகுமுறை மக்களுக்கு நன்மை செய்தது.

இதன் விளைவாக அமெரிக்கா சூப்பர் 301 என்ற தடையிலிருந்து ஜப்பான் நாட்டை நீக்கியது.

இன்று இந்தியா மட்டும் சூப்பர் 301 தடையிலிருந்து எடுக்கப்படவில்லை. காரணம்?

அவர்கள் சொல்லும் சில நியாயமான மாறுதல்களை நாம் ஏற்றுக் கொள்ள மறுக்கிறோம்.

"இதில் நீங்கள் தலையிட உரிமை இல்லை" என்பது நம் வாதம்.

ஜப்பான் எப்படி வியாபார நன்மையைக் கருதி விட்டுக் கொடுத்து வாழ்கிறது என்பதைக் கவனியுங்கள்.

இந்தியர்களாகிய நமக்கு, உலகிலே, "வறட்டுக் கௌரவம் பேசும் நியாயவாதிகள்!" என்கிற ஒரு பட்டமுண்டு.

"ஊர் உலகிற்கு உபதேசம் செய்பவர்கள்" என்கிற வாசகம் நம்மைப் பற்றிப் பேசப்படுவதுண்டு.

இன்னும் என்ன செய்திருக்கிறது ஜப்பான்?

39 வயதுக்குட்பட்ட இளைஞர்களையும் பெண்களையும் தேர்ந்தெடுத்து சமுதாயப் பணி பயிற்சி அளித்து இன்று உலகெங்கும் சமுதாயத் தொண்டர் படையை அனுப்புகிறது.

பங்களாதேஷ், மாலத்தீவு, ஸ்ரீலங்கா, பாகிஸ்தான் என்று பல்வேறு நாடுகளுக்கும் தன் தொண்டர் படையை அனுப்புகிறது.

பலசமயம் இவர்கள் ஜப்பானிய தொழில் நுட்பங்களை அந்தந்த நாடுகளில் அறிமுகப்படுத்தி வாழ்வை வளப்படுத்துகிறார்கள்.

இரண்டாண்டுகள் அவர்கள் அங்கே வாழ்ந்து தொண்டு செய்ய பணச் செலவை ஜப்பான் ஏற்றுக் கொள்கிறது.

இப்படித்தான் அமெரிக்க நாட்டில் ஜனாதிபதி ஜான் கென்னடி அமைதிப் பணித் தொண்டர்கள் என்னும் தொண்டர் படையை உலகம் பூராவும் அனுப்பி வைத்தார்.

உலகம் ஒரு குடும்பம் என்ற ஒரு இணக்க மனப்பான்மையை இது உருவாக்கியது. இவர்களை அடிமட்டத்து ராஜதூதர்கள் என்பார்கள்.

பதினாறு மொழிகளுக்கு மேற்பட்ட மாநிலங்களைக் கொண்ட நம் நாட்டில் இப்படி இளைஞர்களை பல்வேறு மாநிலங்களிலும் ஊடுருவி உழைக்க, தொண்டு செய்ய ஏற்பாடு செய்தோ மானால் இந் நாட்டில் ஒருமைப்பாட்டைப் பற்றி நாம் பேசவும் வேண்டுமா?

இளைஞர்களது அபாரசக்தியும் அவர்களது ஆர்வமும், படிப்பும் எப்படி அடி மட்டத்து கிராம மக்களை கைதூக்கி விடும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

ஜப்பானியர்கள் நல்ல விஷயங்களைப் பிறரிட மிருந்து தெரிந்து கொள்கிறார்கள்.

பின்னர் அதை வாழ்வில் கடைபிடிக்கிறார்கள்.

ஜெர்மனியிலிருந்து காமிரா செய்யக் கற்றுக் கொண்டார்கள்.

இன்று ஜப்பானிய காமிராக்கள் ஜெர்மன் காமிராக்களை விட தரமாகவும், நயமாகவும் கிடைக்கிறது.

ஜப்பானியர்கள் அமெரிக்கரிடமிருந்து கார் செய்வதைக் கற்றுக் கொண்டார்கள்.

இன்று ஜப்பானிய கார் அழகாகவும் வசதியாக வும் நயமாகவும் அமெரிக்க காருடன் போட்டி இடுகிறது.

ஜப்பானை முன்னேற்றிய மனோபாவமென்ன என்பதை அறிந்து கொண்டு அதை நம்முடையதாக்கி, ஏன் ஜப்பானியர்களை நாம் தோல்வி காணச் செய்யக் கூடாது? இது நம்மால் முடியும்.

இனிமேலாவது அதில் கவனம் செலுத்துவோம். வெற்றி காண்போம்.

7

ஜப்பானில் அரசாங்க இடையூறு இல்லை!

ஒரு சமயம் ஜி.டி. நாயுடு அவர்கள் தன் குமாரர் ஜி.டி. கோபாலிடம் ஒரு லட்ச ரூபாயைக் கொடுத்து அதைத் தொழிலில் இஷ்டப்பட்டபடி செலவு செய்யுமாறு கூறிவிட்டு வெளியூர் சென்றார்.

ஜி.டி. கோபால் இளைஞர். தொழில் அனுபவம் அதிகம் இல்லாதவர். எனவே அவர் கண்களில் உறுத்தியது ஒரே ஒரு விஷயம்.

"அலுவலகம் பார்ப்பதற்கு அழகாகவோ, கம்பீரத்துடனோ இல்லை. அதை முதலில் பெருமைப்படும்படி அமைக்க வேண்டும்" என்றெண்ணினார். அலுவலக அறைகளை அழகுபடுத்தினார்; சோபா செட்டுகளை வாங்கிப் போட்டார்.

ஒரு பெரிய நிறுவனத்தில் வரவேற்பு அறைகளும் அலுவலக அறைகளும் எப்படி இருக்குமோ அதைப் போலச் செய்தார். (அந்நிலையில் நீங்கள் என்ன செய்திருப்பீர்கள் என்று கொஞ்சம் சிந்தித்து விட்டு மேலே படியுங்கள்!)

தந்தை ஜி.டி. நாயுடு ஊர் திரும்பினார். மகன் பெருமையோடு தான் செய்த காரியங்களைக் காட்டினார்; தந்தை பெருமையுடன் தட்டிக் கொடுப்பார் என்றெண்ணினார்:

ஜி.டி. நாயுடு கேட்டார்: "மகனே! ஒரு லட்ச ரூபாயை முதலாகக் கருதி அதிலிருந்து அதிகப்பணம் வரும் வழியில் நீ அதைச் செலவழிக்கவில்லை. பணத்தை உற்பத்தி செய்யாத விஷயங்களில் பணம் போயிருக்கிறது!" என்றார். மகனுக்கு வெட்கமாய் - அவமானமாய்ப் போய்விட்டது.

ஜப்பானியர்களது தொழில்கள் சின்னஞ்சிறு இடங்களில் - அறைகளில் தான் துவங்கப்படுகிறது.

ஆடம்பரம் அவர்களுக்கு முக்கியமல்ல.

ஒரு சமயம் அகியோ மோரிட்டா சோனி கம்பெனியின் தலைவர் - தான் முதன் முதலாக தயாரித்த டிரான்ஸிஸ்டர் ரேடியோவை எடுத்துக் கொண்டு அமெரிக்கா சென்றார்.

பாக்கெட் ரேடியோவை எடுத்துக்கொண்டு கடை கடையாக ஏறி இறங்கினார்.

உங்களுடைய உற்பத்தி எவ்வளவு என்றார்கள்.

"ஐந்தாயிரம்" என்றார் மோரிட்டா.

நாங்கள் ஒரு சமயத்தில் எல்லாக் கடைகளிலும் எளிதாக ஒரு லட்சம் ரேடியோவை விற்க முடியும். ஐந்தாயிரத்திற்கு ஆர்டர் கொடுக்க முடியாது!" என்று அமெரிக்கர்கள் சொன்னார்கள்.

மோரிட்டா திகைத்துப்போனார். அதிர்ஷ்டம் வருமென்றால் அதற்காக இப்படிக் கூரையைப் பிய்த்துக்கொண்டு கொட்டினால் எப்படி?

ஒரு வழியாக பேரம் பேசி 40,000 ரேடியோக்களை முதல் தவணையாக அனுப்புவதாக பேரம் பேசி ஊர் போய்ச் சேர்ந்தார்.

ஜப்பானியர்கள் தங்களுக்கிருக்கிற வசதிகளை வைத்துக்கொண்டு அதற்கேற்ப - தங்கள் நேரத்தையும் உழைப்பையும், இடத்தையும் பணமாக்கப் பார்ப் பார்கள்.

ஜப்பானியர்கள் தங்கள் பணத்தையும் திறமையையும் எப்படித் தொழிலாக்கலாம் என்பதில் தான் அதிக கவனம் செலுத்துகிறார்கள்.

அதனால்தான் கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளில் அவர்களுடைய பொருளாதார வளர்ச்சி பிரமிக்கத்தக்கதாய் இருக்கிறது.

இரண்டாம் உலக மகாயுத்தத்தில் அடிபட்டு 1940-ல் ஜப்பானிய பொருளாதாரம் சீரழிந்து போயிருந்தது.

ஜப்பானிய தோல்வி ஜப்பானிய மக்களிடையே ஒரு மகத்தான சுய பச்சாதாபத்தை, தோல்வி மனப்பான்மையை உண்டுபண்ணி இருந்தது.

இதையெல்லாம் மீறி ஜப்பான் உலக வல்லரசாகி இருக்கிறது என்றால் என்ன காரணம் என்பதை நாம் சிந்தித்து, உணர வேண்டும்.

நமது நாடுபோல பொதுமக்களுடைய நாட்டு இளைஞர்களுடைய - கவனம் சினிமாவிலோ அரசியலிலோ செல்லவில்லை.

சினிமாவுக்கும் அரசியலுக்கும் சமுதாயத்தில் ஒரு சிறிய இடம் தான் அங்கே உண்டு.

ஜப்பானிய சமுதாயத்தினரின் பெரும்பாலோரது எண்ணம் "வாழ்வில் முன்னேறுவது, வாழ்வில் வளர்ச்சி பெறுவது" என்பது பற்றித்தான்.

அடுத்து அவர்களது குடும்ப வாழ்க்கை முக்கியத்துவம் பெறுகிறது. தொழில் அபரிமிதமாக வளர்ச்சி பெற்ற நிலையில், "நாமும் பணக்கார னாகலாம்" "நாமும் சாதிக்க முடியும்" என்ற எண்ணங்களும், எல்லோருக்கும் வேலைவாய்ப்பு என்ற சூழ்நிலையும் அங்கே நிலவுகின்றன.

நேற்றைய உழைப்பின் விளைவை இன்று அவர்கள் அனுபவிக்கிறார்கள். நேற்றைய திட்டங் களின் பலனை இன்று அவர்கள் அனுபவிக்கிறார்கள்.

'வளர்ச்சித் துடிப்பு' சமுதாயத்தில் எங்கு பார்த்தாலும் எல்லோரையும் தொட்டிருக்கிறது.

அவர்கள் பங்கை, ஒவ்வொருவரும் செய் கிறார்கள்.

இதனால் நாடு உயர்ந்திருக்கிறது.

தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும், சாதிப்பிரச்னை, பிரிவினை வாதம், அமைச்சர்களது ஊழல்கள், தந்திரங்கள் என்ற நிலை எப்படி பொது வாழ்வைப் பாதிக்கிறது என்பதைக் கவனியுங்கள்.

தொலை நோக்குடனோ, கட்சிக் கண்ணோட்ட மில்லாமலோ, தன்னலமற்றோ இவர்கள் செயல்படு கிறார்களா என்பதை யோசித்துப் பாருங்கள்.

"இவ்வளவு சிறிய வருமானத்திற்கு இவ்வளவு உழைப்பா?" என்ற நோக்கில் ஜப்பானியர்கள் எதையும் அணுகியதில்லை.

"உழைப்பு ஒரு வாய்ப்பு. இல்லாவிட்டால் அந்த சிறிய வருமானம் கூட இல்லாமல் போயிருக்குமே!" என்ற உணர்வுடன் ஜப்பானியர்கள் விஷயங்களை அணுகுகிறார்கள்.

ஜப்பானியர் வியாபாரத்தில் போட்டியை வரவேற்கிறார்கள்.

இதன்மூலம் மற்றவரை விட சிறந்த பொருளை, மற்றவரை விட மலிவான விலையில் விற்க வேண்டும் என்கிற போட்டி மனப்பான்மை பொதுமக்களுக்கு நன்மையாய் முடிகிறது.

தொழில் திறப்பதில் அரசாங்க லைசென்ஸ் பெறுகிற விஷயமெல்லாம், அமெரிக்காவிலும் கிடையாது; ஜப்பானிலும் கிடையாது.

இதன் விளைவாக அரசாங்கத்தின் தலையீடு, குறுக்கீடு எதுவுமே தொழிலில் இல்லை. அவர்கள் சுதந்திரமாக செயல்படமுடிகிறது.

தெருவில் நடந்து செல்பவனிடம் ஒரு காவல் துறை அதிகாரி எந்த விதத்திலும் குறுக்கிடமுடியும் என்பது நமது ஊர் நியதி. நமக்கு பாதுகாப்பு இல்லை.

பாதுகாப்பு கொடுப்பவரிடமிருந்தே, நாம் பாதுகாப்பை நாட வேண்டி இருக்கிறது!

அதே போல தன்னிச்சையாக ஒரு தொழிலைத் துவங்கினோம் என்றில்லை, நமது ஊரில்.

அரசாங்க அனுமதி, மின்சாரம், தண்ணீர் வழங்குதல், என்பவற்றிலிருந்து மாசுக் கட்டுப்பாடு என்கிற பெயரிலோ, அல்லது ஆணுக்கும் பெண்ணுக்கும் தனித் தனிக் கழிவிடங்கள் போதுமானதாக இல்லை என்கிற பெயரிலோ - இன்னும் ஆயிரம் காரணம் காட்டி நம் தொழிலை ஒரு அரசாங்க அதிகாரி முடக்கி விட முடியும்.

லட்சக்கணக்கில் முதல் போட்டு "எப்படிப் போகுமோ வியாபாரம்?" என்று கவலைப்படுபவனை ஒரு மாத சம்பளக்காரரர் அரசாங்க அதிகாரி என்கிற முறையில் ஒரு நிறுவனத்தில் ஓட்டத்தையே நிறுத்தி வைக்க முடியும்.

இந்த நிலையில் எந்த சுய புத்தி உள்ளவன் புது தொழில் துவங்க முன் வருவான்?

தொழில் வளர்ச்சி பற்றி பேசும் அமைச்சர்கள் பலருக்கு காலணாவுக்குத் தொழில் அனுபவம் இருக்காது.

அதேபோல அரசாங்க அதிகாரிகளுக்குத் தொழில் அனுபவம் கிடையாது.

இவர்கள் நம் நாட்டில் தொழில்களை நெறிப்படுத்தும் பணியில் இருக்கிறார்கள்!

தொழிலில் இருந்து அனுபவம் பெற்றவர்கள் தான் தொழில் மந்திரியாக இருக்கிறார்கள் அமெரிக்காவில்.

அமெரிக்காவில் வர்த்தக காரியதரிசியாக இருந்த புளூமெந்தால் (Blumenthal) ஒரு பெரிய தொழிலதிபர்.

படிப்பில்லாதவன் பள்ளிக்கூடம் நடத்துவது போல தொழிலறிவு - அனுபவமில்லாதவர்களது இடையூறுகளினால் நம் நாட்டில் தொழில் வளர்ச்சி முடக்கப்படுகிறது.

இவர்களுக்கு 'வாய்பூட்டு' போட்டுத்தான் ஒரு பெரும் தொழிலதிபர் தொழில் செய்ய வேண்டு மென்றால், தொழிலதிபர் அரசியல்வாதிக்குக் கொடுக்கும் லஞ்சப்பணம் விற்கப்படும் பொருளின் விலை ஏற்றத்தில் தானே முடியும்?

இதைப் போன்ற அவலங்களை ஜப்பானில் பார்க்க முடியாது.

தொடர்ந்து வந்த பல ஜப்பானிய பிரதமர்களை அவர்கள் செய்த தவறுகளுக்காக வேகமாக பதவியிலிருந்து இறக்கினார்கள், ஜப்பானில் பலர் மீது விசாரணை நடைபெறுகிறது.

ஜப்பானில் வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். ஆனால் மிகக் குறைந்த எண்ணிக்கையில்.

ஏனெனில் பொது வாழ்விலும், தனி மனித வாழ்விலும் ஜப்பானியர்கள் எல்லாவற்றிலும் ஒரு மத்தியஸ்தம் செய்து கொள்ளும் மனோபாவம் கொண்டார்கள்.

பொதுவாக கோர்ட்டில் போய் பணத்தையும் நேரத்தையும் அவர்கள் செலவிடுவதில்லை.

விட்டுக் கொடுத்து சமரசம் காணும் முயற்சி அவர்கள் ரத்தத்தில் ஊறி இருக்கிறது. வீம்பு பேசிக் கொண்டு "முயலுக்கு மூணே கால்!" என்பது அவர்களது பாரம்பரிய குணமல்ல.

“தன்னையும் உயர்த்தி, எதிரியையும் உயர்த்தி எல்லாப் பிரச்னைகளுக்கும் ஒரு சுமுகமான வழியைக் கண்டு பிடித்து உலகுக்கு அளித்தது தான் காந்தியின் மகத்தான சாதனை என்று அமெரிக்க அறிஞர்கள் மகாத்மா காந்தியைப் பற்றி எழுதுகிறார்கள்.

ஜப்பானிலே அதைப் பாரம்பரிய குணமாக்கி விட்டார்கள்.

காந்தியின் சொந்த வீட்டுக்காரர்களாகிய நாம் காந்தி வழிபற்றி நடக்கிறோமா, அதுபற்றி நம் குழந்தைகளுக்காவது சொல்லிக் கொடுக்கிறோமா என்று கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

பிறநாட்டு பெரும் நிறுவனங்கள்; (Multinationals) நம் நாட்டில் நுழைவது பற்றி தேசீயத் தலைவர்கள் சிலர் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அமெரிக்கா என்ன செய்தது என்று கவனியுங்கள்.

அமெரிக்கர்களை விடத் தரமான காரை குறைந்த விலையில் ஜப்பான் தயாரித்தபோது, “ஜப்பான் கார் இறக்குமதியைத் தடை செய்யுங்கள்” என்ற கூக்குரல் அமெக்காவில் எழுந்தது.

ஆனால் நடந்தது என்ன?

இன்று ஜப்பானிய கார்கள் அமெரிக்க நாட்டில் உற்பத்தி ஆகின்றன. இதன் மூலம் நயமான கார்கள் பொதுமக்களுக்குக் கிடைக்கின்றன. இதைவிட முக்கியமாக அமெரிக்கர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது.

ஜப்பானிய உற்பத்தி நிர்வாகத்தை ஜப்பானியர்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள்.

இதன்மூலம் அவர்கள் எப்படிச் செய்கிறார்கள் என்பதைக் கண்டறிகிறார்கள்.

அதற்கு மேலாக பொருட்களை மேம்படுத்துவது எப்படி என்கிற ஆராய்ச்சி ஜப்பானிலும், அமெரிக்காவிலும் தொடர்ந்து நடைபெறுகிறது.

இந்தியாவில் அப்படி ஆராய்ச்சி எதுவும் நடைபெறுவதில்லை.

தொழில் நுட்பம் மேனாட்டில் வளர வளர தொழில் நுட்பத்தை அவர்களிடமிருந்து தான் தொடர்ந்து பெறுகிறோமே ஒழிய நம் நாட்டில் ஆராய்ச்சி நடத்தி, தன்னிறைவு காண வேண்டும் என்கிற எண்ணம் இல்லை என்பதைப் பற்றி இந்தியாவைப் பலர் பரிகாசம் செய்கிறார்கள்.

வெளிநாடுகளில், ஜப்பானியப் பொருட்களை வாங்குகிற அமெரிக்கக் கம்பெனிகளின் பெயரில், அவை விற்பனை செய்கின்றன.

காலப்போக்கில் அதே தரமுள்ள பொருளை நாம் உற்பத்தி செய்து ஜப்பானுடைய இறக்குமதியை நிறுத்தி விடலாம் என்ற நம்பிக்கையில் செயல்படுகிறார்கள்.

இந்தியாவில் டி.வி.எஸ் சுசுகி என்றும் ஹீரோ ஹோண்டா என்றும் ஜப்பானிய பொருளுக்கும் அவர்களது கம்பெனிக்கும் முக்கியத்துவம் கொடுத்து அவர்களை இங்கே வளர்க்கிறோம்!

"பொதுமக்கள் நம்மை நம்பமாட்டார்கள்!" என்கிற எண்ணம் நம்மிடம் ஊறிப் போயிருக்கிறது!

ஜப்பானியர்கள் தொழிலை எப்படி அணுகு கிறார்கள்?

தொழிலை நிர்வகிப்பவன் சர்வாதிகாரி அல்ல அங்கே; சொந்தக்காரனாக இருக்கலாம், ஆனால் தன்னிஷ்டப்படி செயல்படுபவனல்ல. தொழில் நிர்வாகியை "தொழிலை ஓடச் செய்பவன்" என்று அழைக்கிறார்கள்.

பொருளை வாங்கும் பொதுமக்கள் தான் அந்நாட்டின் மன்னர்கள்.

பொதுமக்களது சேவைதான் - அதைப் பூர்த்தி செய்யும் பணிதான் தொழிலதிபர்களின் பணி.

"பிரச்னைகள் என்ன?" என்று அடையாளங் கண்டு கொள்பவர் தான் நிர்வாகி.

பிரச்னைகளுக்கு வழிகண்டு தொழில் ஓட்டத்தை தொடரச் செய்வதுதான் மற்ற நிர்வாகிகளின் பணி. சளைக்காத மனம் தான் அவர்களது துணை.

இதெல்லாம் நம் ஊரிலும் இருக்கிறது என்று சொல்லலாம்.

ஜப்பானியத் தொழில்கள் அனைத்திலும் இந்த கூட்டுப் பொறுப்பு ஒரு கலாசாரமாக வளர்க்கப் பட்டிருக்கிறது; போற்றப்பட்டு வருகிறது.

முதலில் புரிந்துகொள்வோம். தேவையை ஏற்றுக்கொள்வோம் பின் செயல்படுவோம்.

நம்மால் முடியும்!

8

நம்மிடம் இல்லாதது என்ன இருக்கிறது ஜப்பானில்?

ஜப்பானைப் பாருங்கள்!

அவர்கள் ஏன் முன்னேறி இருக்கிறார்கள்?

காரணமென்ன?

வெற்றி மனோபாவம் என்ன?

ஏன் நாம் அதைப் பின்பற்றி முன்னேறக் கூடாது?

நமது சொந்தவாழ்விலே வெற்றி பெற்ற பிறரைப் பார்த்துத்தான் நாம் உத்வேகம் பெறுகிறோம், அவர்களது வழிகளைத்தான் பூரணமாக அறிந்து கொள்ள முயல்கிறோம்.

உலகெங்குமுள்ள மனித இயல்பு இது.

முன்னோர்களிடமிருந்து தெரிந்து கொள்ளுதல் - அவர்களது அனுபவ பாடங்கள், இதை சரித்திரப் பாடம் என்கிறோம்.

அதே போல தனிமனிதர்களிடமிருந்து தெரிந்து கொள்வதை வாழ்க்கை வரலாறு என்கிறோம்.

அதேபோல பிற சமுதாயங்களிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டியதை சமுதாய இயல் - சமுதாயங்கள் ஒப்புமை செய்தல் என்கிறோம்.

அதேபோல பிற சமுதாயங்கள் என்ன மனோபாவங்களில் முன்னேறின என்பதைப் பற்றிய அறிவை சரித்திரத்தின் மனவியல் சமுதாயத்தின் மனவியல் என்கிறோம்.

ஆனால் நம்நாட்டில் பல 'புத்திசாலிகள்' 'அறிஞர்' பேசும் மேடையில் நாம் கேட்பதென்ன?

"ஆகா, பாருங்கள்! இவர் 'ஜப்பானைப் பார், ஜெர்மனியைப் பார் அமெரிக்காவைப் பார்!' என்கிறார். நம்மிடமே தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கின்றன.

"ராமாயணத்தில் இருக்கிறது. திருக்குறளில் இருக்கிறது. அதைத் தெரிந்து கொண்டோமா? உபநிடதத்தில் சொல்லாதது என்ன?" என்கிற ரீதியில் பேசும் பெரியவர்களைப் பார்க்கிறோம்.

பொதுவான மனித குறைகளைக் குறிப்பிடும் போது எப்படி சில மனிதர்கள் அது தங்களைப் பற்றிய சொந்த விமர்சனம் என்று கோபப்படுகிறார்களோ அதுபோல, 'ஜப்பானைப் பார்!' என்றதும் இது ஏதோ திருக்குறளுக்கு எதிராக, தேவாரத்திற்கு எதிராக எழுதப்பட்டது என்றும், எல்லாம் நம் இலக்கியத்தில் முன்பே இருக்கிறது என்றும் சில 'பேராசிரியர்கள்' மேடைகளில் வெளுத்து வாங்குகிறார்கள்.

"பொய்யுடை ஒருவன் சொல்வன்மையினால் மெய் போலும்மே, மெய் போலும்மே" என்பது போல இவர்கள் தங்கள் வாக்கு சாதுர்யத்தால் பிறரது கருத்துகளின் நன்மையைக் கண்டு பயன்பெறும் ஒரு நல்ல வாய்ப்பைப் பிறரும் நழுவவிடப் பாடுபடு கிறார்கள்.

அவர்களது சொந்த வாழ்வைப் பார்ப்போமானால் அவர்கள்தான் தமிழ்க் கல்வி போதாது என்று கான்வென்ட் பள்ளிக்கு தங்கள் குழந்தைகளை பூட்சும், யூனிபாரமும் போட்டு ஆங்கிலப் படிப்பு படிக்க அனுப்புவார்கள். அவர்களது குழந்தைகளை எப்படி அமெரிக்கா அனுப்பலாம் என்று நாயாய் அலைவார்கள்.

திருக்குறளை, தேவாரத்தை, திருவாசகத்தை, திருவிளையாடல் புராணத்தை, ராமாயண காவியத்தைப் படியுங்கள். வேண்டாமென்று சொல்லவில்லை.

ஊர் உலகம் எப்படிப் போய்க்கொண்டிருக்கிறது என்கிற உலக நிலவரமும் அதிலிருந்து பெறும் உலக ஞானமும் நமக்கு வேண்டும். மனிதன் தீவல்ல; ஒரு சமுதாயம். “ஊர் உலகம் வேண்டாம். நாங்கள் எங்கள் கலாசாரத்தை நம்பியே வாழ்ந்து முடிப்போம்” என்று எண்ணினால் பழங்குடி மக்களாய்த்தான் காலப் போக்கில் அந்த சமுதாயம் மாறும்.

“சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!” என்றார் பாரதி.

பலநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைப் படிப்பதன் மூலம்தான் அதிமனித மூளைகளுடன், சிந்தனாவாதிகளுடன், பயன்தரும் கண்டுபிடிப்புக்களைத் தரும் விஞ்ஞான மனோபாவத்துடன் நாம் தொடர்பு கொண்டிருக்க முடியும்.

நமது நாட்டுப் பேராசிரியர்கள் சிலர், “கலைச் செல்வங்களைக் கொண்டு சேர் என்றுதான் பாரதி சொன்னான்.

"பிகாசோவின் படங்களையும், மைக்கேல் ஏன்ஜலோவின் சிற்பங்களையும்தான் கொண்டு சேர்க்கச் சொன்னான்" என்று மேடையில் பேசுவார்களானால் நான் ஆச்சரியப்படமாட்டேன்.

இந்தக் கிணற்றுத் தவளைத்தனம் நம்மைவிட்டு நீங்க வேண்டும்.

'வாலறுந்த நரி வால் இல்லாமல் இருப்பது எவ்வளவு சுகம்' என்று உபதேசித்த கதையாய் இருக்கிறது, நமது அறிஞர்கள் பலர் மேடையில் முழங்குவது.

இவ்வளவு முன்னுரையும் ஏன் என்றால், ஜப்பானியர்கள் படிப்பில் காட்டும் ஆர்வம், அக்கறை, பிற சமுதாய சரித்திரங்களையும் பிற மொழியிலுள்ள சிறந்த நூல்களையும் படிப்பதில் காட்டும் ஆர்வத்தையும் குறிப்பிடத்தான்.

ஜப்பானிய பாட நூல்களில் மேற்கத்திய நாடுகளைப் பற்றிய வளர்ச்சி, அதைப் பற்றிய துல்லியமான அறிவு ஒரு கட்டாய பாடம்.

அதேபோல் "மேற்கத்திய நாடுகளின் சரிவு" — பேசப்படும் ஒரு விஷயமாக ஒரு காலத்தில் இருந்தது. அதாவது இந்த நூல் மேற்கத்திய நாடுகளில்கூட அவ்வளவு விற்பனை ஆகவில்லை; பிரபலம் ஆகவில்லை.

மாறாக அமெரிக்காவின் தென் மாநிலங்களில் இன்றும்கூட "டார்வின் தத்துவம் தவறு. பைபிளில் கூறியிருக்கிறபடி உலகம் சில நாட்களில் படைக்கப்பட்டது. ஆணின் விலா எலும்பை எடுத்து பெண் படைக்கப்பட்டாள். இதுதான் சரியான

பரிணாமக் கொள்கை. இதைத்தான் சொல்லிக் கொடுக்க வேண்டும் மாணவர்களுக்கு'' என்று இதற்காக நீதிமன்றம்வரை சென்று வாதாடினார்கள் சில ஆண்டுகளுக்கு முன்பாக.

“ஜப்பானிய மக்கள் இதை எல்லாம் கண்டு சிரிப்பார்கள்'' என்று எழுதுகிறார் பர்னார்டு ரூடோவ்ஸ்கி தனது “கிமானோ மனம்'' என்ற நூலில்.

நீங்கள் ரயிலில் பயணம் செய்தாலும் சரி, காலையில் காப்பிக் கடைக்குச் சென்று ஜப்பானியக் கஞ்சி அருந்தினாலும் சரி, ஜப்பானியர்கள் இடது கையில் ஒரு புத்தகத்தை வைத்துப் படித்தபடி உணவருந்திக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம்.

நம்நாட்டில் இருப்பது போல “எல்லாமே இங்கிருக்கிறது. என்ன குறை இங்கே? பிற கலாசார உண்மைகளைத் தேடி அறிவது என் கலாசாரத்தைத் தாழ்த்துவதாகும்'' என்ற எண்ணம் அங்கே இருப்ப தில்லை.

பியூகுசாவா என்ற ஜப்பானியர் எழுதிய “படிப்பதை ஊக்குவியுங்கள்.'' “படிப்பில் ஆர்வமுள்ள வர்கள்'' என்ற தலைப்பில் வெளிவந்த புத்தகம் கிட்டத்தட்ட 34 லட்சம் பிரதிகள் விற்பனை ஆயின என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

நம் நாட்டில் படித்துவிட்டு, குப்பையில் போடுகிற சில பத்திரிகைகளை வாங்குகிற அளவுக்குக் கூட புத்தகங்களை வாங்கும் மனோபாவம் நம்மிடம் இல்லை.

இரண்டு லட்சம் என்றும் 6 லட்சம் என்றும் பத்திரிகைகள் விற்கும் தமிழ் நாட்டில் ஆயிரம்

இரண்டாயிரம் புத்தகப் பிரதிகள் விற்பனையாவது பெரிய விஷயமாகக் கருதப்படுகிறது.

அறிஞர்களும், நாட்டின்பால் அக்கறை கொண்டவர்களும் இதைப்பற்றி தீவிரமாக சிந்திக்க வேண்டும்.

ஒவ்வொரு பள்ளிக்கும் மிக அடிப்படைத் தேவையான சிறுவர் கலைக்களஞ்சியம் என்ற அருமையான தொகுப்பு ஆயிரக்கணக்கில் பள்ளிகள் இந்நாட்டில் இருந்தும், வாங்கப்படாமல் அச்சிடப் பட்ட இடத்தில் அழுக்கு படிந்து தூக்குகிறது என்றால் என்ன அர்த்தம்?

இதைவிட மிக முக்கியமான விஷயம். நம்மைக் கவர்வது, ஜப்பானிய கிராமக் கலாசாரம்தான்.

இதுதான் முழு ஜப்பானிய சமுதாயத்தின் அடிப்படை கலாசாரத்திற்கு ஆணிவேர் என்றால் அது மிகையாகாது.

அவர்களிடம் தங்களது ஊருக்காக, நாட்டுக்காக, தங்களது சமுதாயத்திற்காக சில கடமைகளை நாம் செய்ய வேண்டும் என்னும் எண்ணம் ஊறிப்போயிருக்கிறது.

கிராமத்தில் யாராவது ஒருவர் வீடு கட்டிக் கொண்டிருந்தால் பக்கத்தில் உள்ளவர்கள் எல்லாம் வந்து வீடுகட்ட உதவுவார்கள்.

தோட்டத்திற்கு வேலி போட்டாலும்சரி, அறுவடையின்போதும் சரி, நாற்று நடும்போதும் சரி, அவர்கள் சும்மா இருந்தால், உடனடியாக மற்றவர்களுக்கு உதவுவார்கள்.

“நாம் எல்லோரும் இங்கு வாழ்கிறோம். அவர்கள் சுகதுக்கம் நமது சுகதுக்கம். அவர்களது கஷ்டம் நமது கஷ்டம். நாம் உதவவேண்டும், என்ற எண்ணம் அவர்களிடையே கடமையாக நிலவுகிறது.

இப்படி உதவியைப் பெறுபவன் பதிலுக்கு என்ன செய்கிறான்?

ஏதோ ஒரு சிக்கனமான விருந்து - ஒரு வேளை உணவு - என்று எல்லோரையும் கூப்பிட்டு வீட்டில் உள்ளதை அளிக்கிறான். பிறர் உழைத்த கூலிக்கு இது சமமாகப் போய்விட்டது! இப்படித்தான் அங்கே நடைபெறுகிறது.

நான் ஜப்பானுக்குப் போயிருந்தபோது, சுரங்க ரயில்பாதைக்குள் சென்று, “எந்த ரயிலில் ஏறுவது? எது எங்கே போகிறது?” என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தேன்.

ஆங்கிலம் தெரிந்த ஒரு இளைஞர் விளக்கினார். நான் புரிந்து கொள்வதில் தடுமாறுவதைக் கண்டு, “எங்கே போக வேண்டும்?” என்றார்.

“கின்சா பகுதிக்கு சும்மா வேடிக்கை பார்க்க” என்றேன்.

மனிதர், “சரி வாருங்கள். இரண்டு பேரும் போகலாம்” என்று எனக்கும் சேர்த்து டிக்கெட் எடுத்துக்கொண்டு வந்து விட்டார்.

என்னுடன் இரவு 11 மணி வரை ஊர்சுற்றிக் காட்டினார்.

“வீட்டில் மனைவி கவலைப்பட மாட்டாரா?” என்று கேட்டேன்.

"ஜப்பானிய மனைவி இதற்கெல்லாம் பழக்கப் பட்டவள்" என்றார்.

அதேபோல நானும் என் மனைவியும் புத்தர் கோயில்களைப் பார்க்கப் போனபோது மழை பிடித்துக் கொண்டது. ஒரு ஜப்பானிய இளம்பெண் எனக்கும் என் மனைவிக்கும் மாறி மாறி உதவியதை என்னால் மறக்க முடியாது.

அத்தகைய சமுதாய உறவு - சமுதாயக் கடமை - என்கிற குணம் நகரங்களில் கூட அங்கே நிலவுகிறது.

இந்திய நகரங்கள் மனிதாபிமானமில்லாமல், நாயை நாய் தின்னும் உலகமாக பெரும்பாலும் இருக்கிறது என்பதை யார் மறுக்க முடியும்?

"இது ஏன்?" என்பதையும் "இதுபற்றி என்ன செய்யலாம்" என்பதையும் நாம் யோசித்துப் பார்க்க வெண்டும்.

அதேபோல் தொழில் கூடங்களிலும், பேராசை, சுயநலம், ஆணவம் தலைகாட்டுவதில்லை.

பொது நலம், நிறுவனத்தின் லட்சியம் - இதை முன்வைத்து அங்கே செயல்படுகிறார்கள் அல்லது நடந்து கொள்கிறார்களே ஒழிய சுயநலத்தை முன்வைத்து அல்ல.

ஒரு நிறுவனம் நஷ்டத்தில் ஓடிற்று என்றால், அல்லது அதன் தாழ்விற்கு அதன் நிர்வாகிதான் பொறுப்பு என்றால் அந்த நிறுவனத்தின் தலைவன் தன் சம்பளத்தில் பெரும் வெட்டை மனமுவந்து தானே விதித்துக் கொள்கிறான்.

இத்தனைக்கும் ஒரு நிறுவனத்தின் நிர்வாகியின் சம்பளம் அமெரிக்கா போல் அவ்வளவு அதிகமானதல்ல.

பலசமயம் ஒரு நிறுவனத்திற்குக் கெட்டபெயர் வந்தால் அதைத் தன் பொறுப்பாக ஏற்று தன் கௌரவம் பாழடைந்ததாக ஏற்று வேலையை ராஜிநாமா செய்கிறார். இது சகஜமான விஷயம்.

நம் நாட்டுத் தலைவர்கள், ஊழல் குற்றம் நடக்கிறது அல்லது ஆயுத கலாசாரம் வளர்கிறது என்றால் குற்றத்தை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அதன் உண்மை பொய்யை மறுக்க மாட்டார்கள்.

"ஆயுத கலாசாரத்தின் ஆதிபகவன் யார்?" என்று எதிரியை மடக்கி ஆராய்ச்சியில் இறங்கி பொதுமக்களை முட்டாளாக அடிப்பார்கள்.

எளிமை, சிக்கனம் என்ற இரண்டின் முழு உருவம் ஜப்பானியர்கள் என்று சொல்லலாம்.

அத்துடன் 'அவசியம், மரியாதை' என்பதையும் நாம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பொருளை வீணாக்குவது என்பது அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

நமது ஊர்போல் "கடைசி அரிசிப் பருக்கையைக் கூட வீணாக்கக்கூடாது" என்கிற மாதிரி குழந்தைகளுக்கு சாப்பிட சொல்லிக் கொடுப்பார்கள்.

'சாப்ஸ்டிக்' என்று சொல்லப்படும் இரண்டு நீண்ட மூங்கில் குச்சிகளை கைவிரல்களால் பிடித்துக்கொண்டு எப்படிச் சாப்பிடுவது என்பதை

அவர்கள் குழந்தைகளுக்குச் சின்ன வயதிலேயே சொல்லிக் கொடுக்கின்றனர்.

இதன்மூலம் 'கைத்திறன்' 'லாகவம்' வளர்கிறது என்பது அவர்கள் கணிப்பு.

ஒரு கத்தியைக் கையாளுவதில் கூட, உணவு படைப்பதில்கூட, ஜப்பானியமுறை, அதற்கென்று ஒரு அழகைப் பெற்றிருக்கும். 'மலர்களை அடுக்கி அலங்கரித்தல் என்பதும், தேனீர் வழங்கும் சடங்கு என்பதும் பிரசித்தம்.

எதிலுமே பயனையும், வேகத்தையும் அவசரத்தையும் அனுசரிக்கும் அமெரிக்கர்கள், "இதென்ன இது! தேனீர் கொடுக்க இப்படி ஒரு சம்பிரதாயமா? சடங்கா? பூவை அலங்கரித்து அடுக்குவதில் இவ்வளவு நேரம் எடுத்துக் கொள்வதா?" என்று சொல்வார்கள்.

ஜப்பானிய உணவும், சீன உணவும் ஒரே மாதிரிதான் கிட்டத்தட்ட இருக்கும்.

சீன உணவு படைப்பது என்பது எல்லா மேற்கத்திய உணவகங்களிலும் பரிமாறுகிறமாதிரிதான்.

ஆனால் ஜப்பானிய உணவகங்களுக்குள் சென்றால் இருப்புச் சட்டியை நீண்ட சதுர இரும்புத் தகடாக்கி அதை நடுமேஜையாக்கி, சுற்றுப்புறங்களில் நம்மை அமர்த்துவார்கள்.

நம் கண்ணெதிரே மேஜைமீது கறிகாய்களை - மாமிசங்களை - வெட்டுவார்கள். எள்ளுப் பொடியினை சேர்ப்பார்கள், எண்ணெய் ஊற்று வார்கள். நம் கண்ணெதிரே சமையல் நடைபெறும்.

ஐந்தாறு நிமிடங்களில் முக்கிய உணவு அனைவருக்கும் — மேஜையிலுள்ள பத்து பேருக்கும் — தயாராகிவிடும்.

அப்படி தயாரிக்கும்போது கத்தியை உயரே தூக்கிப்போட்டு பிடிப்பார்கள். லாகவமாக வெட்டு வார்கள். கத்தியினால் சத்தம் எழுப்புவார்கள்.

சொல்லப் போனால் சமையல் செய்வதை 'தேனீர் சடங்கு' போல ஒரு நாடகமாக ஆக்கி உணவு படைப்பார்கள்!

கருவிகளை உபயோகிப்பதில் அவர்கள் காட்டும் திறனும், நுட்பமும், லாகவமும், அதிசயிக்கத் தக்கவை.

அவர்களுடைய கலைப்பொருட்கள் இதனால் தான் அதிக விலை பெறுகின்றன.

ஏதோ 'போனானுக்கு வந்தான்' என்று ஏதோ செய்தோம் என்று அவர்கள் எதையுமே செய்வ தில்லை.

செய்கின்ற காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும் என்பதும், அதை ஒரு ஆராதனை யாக முழுத்திறமையையும் உபயோகித்து அதில் ஒரு தரத்தைக் கொண்டுவர வேண்டுமென்பதும் ஒவ்வொரு ஜப்பானியரிடத்தும் இளவயதிலேயே உணர்த்தப்படுகிறது.

9

ஓம் சக்தி! மக்கள் சக்தி!

மக்கள் சக்தி தனி மனிதர்களாலான கூட்டு சக்தி. ஓம்சக்தி தனி மனிதர்களுக்குள் நிறைந்து நிற்கும் ஆற்றல்; தனிமனிதனையும் இந்தப் பிரபஞ்சத்தையும் இணைக்கும் ஆற்றல்.

இன்றைய உலகின் பிரச்னைகளுக்கு காரணமே தனிமனிதன் தன்னுள் இருக்கும் மகத்தான ஆற்றலை உணராததுதான்.

தன்னுள் இருக்கும் மகத்தான ஆற்றலை உணரத் துவங்கும்போது, இந்த சமுதாயம் இப்பிரபஞ்ச லயத்தை ஒட்டி ஒரு ஆனந்தமான வாழ்வை வாழும்.

நம்மிடமிருக்கும் சக்தியை உணரும் போது அதிலிருந்து மூலாதாரத்துடன் நாம் தொடர்பு கொள்ள முடியும் - நாமே இப்பிரபஞ்ச சக்தியாய் விரிய முடியும் - என்ற நிலையை உணரும்போது மனிதன் தேவநிலையை அடைகிறான்.

அப்படி என்றால் ஏன் மனிதன் தன்னை அறிந்து கொள்ளவில்லை?

தன்னை அறிந்துகொள்வதில் ஏன் அக்கறை காட்டுவதில்லை?

"நான் யார்?" என்று அறியாமல், இந்த 'நாளை' உபயோகிக்கத் துவங்கும் அவசரம் மனிதனுக்கு ஏன்?

இதனால்தான் "உன்னை நீ அறிந்து கொள்!" என்றார் சாக்ரடீஸ்.

அதற்கு மேலும் ஒரு படி சென்று உபநிடதம் "நீயே அது" (தத்துவமசி) என்று கூறுகிறது.

இப்பிரபஞ்சத்தின் (கடவுளின்) ஒரு சிறுபகுதி நீ!

அதன் முழு ஆற்றலும் உன்னுள் அடங்கும்.

"எதை எண்ணுகிறாயோ அதுவாக மாறுவாய்."

"செல்வத்தைப் பற்றி எண்ணினால் செல்வந்தனாய்" – "கல்வியைப்பற்றி எண்ணினால் கல்விமானாக" –

"தொழிலைப் பற்றி எண்ணினால் தொழிலதிபனாக" –

"சிந்திப்பதைப்பற்றி யோசித்தால் சிந்தனையாளனாக" –

"ஞானத்தைப்பற்றி, யோகத்தைப் பற்றி எண்ணினால் ஞானியாக – யோகியாக ஆவாய்!" என்று சொல்கிறது உபநிடதம்.

வாழ்வின் கடைசி குறிக்கோள் அந்த நிலையை அடைவதாகத்தான் இருக்கமுடியும்.

உபநிடதமும் அரவிந்தரும் கூறும் இதையேதான் புகழ்பெற்ற மனவியல் அறிஞர் மாஸ்லோ தன்னை பூரணமாக வெளிக்கொணருதல் என்றார்.

அதாவது மனிதன் தன்னிடமுள்ள எல்லாத் திறமைகளையும் வெளிக் கொணர்ந்து தனக்கும்,

பிறருக்கும், இந்த சமுதாயத்திற்குமாக வாழ்வதுதான் மனித வாழ்வின் கடைசி தாகம் என்று குறிப்பிடுகிறார்.

அப்படிப்பட்ட நிலையை நமது சமுதாயத்தில் கொண்டு வரமுடியுமா?

நிச்சயமாக!

மனிதனிடத்து இருக்கும் ஆற்றலைப் பற்றிய விழிப்புணர்ச்சியை மக்களிடத்து ஏற்படுத்தும் போது நிச்சயமாக எல்லோரும் அமர நிலை எய்த முடியும்.

சமீபத்தில் ஒரு ஆராய்ச்சி செய்தார்கள். அதில் மனித மூளை கடந்த 300 ஆண்டுகளில் எந்தவித பிரமிக்கத்தக்க வளர்ச்சியையும் பெறவில்லை என்று கண்டார்கள்.

அதே சமயம் கடந்த 300 ஆண்டுகளில் இங்கிலாந்தில் நிகழ்ந்த தொழில் புரட்சியின் மூலம் இன்று விமானம், தொலைக்காட்சி, தொலைபேசி, மின்சாரம், என்று பல்வேறு வகைகளில் மனிதன் தன் வசதிகளைப் பெருக்கி வளர்ந்திருக்கிறான், என்பதையும் கண்டார்கள். மனித மூளை வளரவில்லை என்றால் இத்தகைய புதிய விஞ்ஞான கண்டுபிடிப்பும் முன்னேற்றமும் எதனால் சாத்தியமாயிற்று?

“நாம் கொடுத்த கல்வியினால்தான்!” என்ற முடிவுக்கு வந்தார்கள்.

எனவேதான் தனக்குள் இருக்கும் ஆற்றலை அறிந்துகொள்ளும் ஒரு கல்வியை அடுத்துவரும் தலைமுறைக்கு நாம் - விஞ்ஞானப்பாடம் போல - முறையாக சொல்லிக் கொடுக்க வேண்டும்.

அப்படிச் சொல்லிக் கொடுத்தோமானால் மனித சமுதாயம் நிச்சயமாக விஞ்ஞான முன்னேற்றத்திற்கு சமமான ஆன்மிக வளர்ச்சியைப் பெறும்.

இது இயல்பானது; முடியாத காரிய மல்ல.

இந்தத் திசையில் தான் சமுதாயம் அடுத்த நூற்றாண்டில் செல்லும் என்பதை ஜான் நெஸ்பிட் என்கிற பிரபல எழுத்தாளர் தனது "மனித சமுதாயம் செல்கின்ற - பெரும் திசைகள்" என்கிற நூலில் குறிப்பிடுகிறார்.

ஜான் நெஸ்பிட், வருங்காலத்தில் மக்கள் சிந்தனைகள் எந்த திசையில் செல்லும் என்பதைப் பற்றி ஆராய்பவர்.

அவரது கணிப்பின்படி உலக மக்கள் இரண்டு விஷயங்களில் அதிக கவனம் செலுத்துவார்கள்.

1. ஆன்மிக வளர்ச்சி. மனிதன் தன்னை அறிந்து கொள்வதில், தியானம், யோகம் மூலம் தனது சக்தியை உணர்ந்து அதை அன்றாட வாழ்வுக்குப் பயன்படுத்து வதிலும்:-

"நான் ஏன் பிறந்தேன்?"

"இந்த உலகிற்கும் எனக்குமுள்ள தொடர்பு என்ன?"

என்பது பற்றிய சிந்தனைகளிலும் அதிக கவனம் செலுத்துவான் என்பதாகும்.

இதற்கான அடிப்படைகளை இன்று நாம் காண்கிறோம்.

பொருள், உடைமைகள், சொத்து, வாழ்க்கை வசதிகள் என்று அதிகம் கவனம் செலுத்தும்

அமெரிக்க வாழ்வில் இன்று தியானம், கிழக்கத்திய மனோதத்துவம் என்ற தலைப்பின் கீழ் இடம் பெறுகிறது.

சாதாரண கிராமங்களிலிருந்து பல்கலைக் கழகங்கள், தொழில் நிறுவனங்கள் வரை இன்று தியானம் பேசப்படுகிறது; பயிலப்படுகிறது.

நமது ஊர் ஞானிகளும் யோகிகளும் வெகுவாக அங்கே, அமெரிக்காவில் குடியேறி இருக்கிறார்கள்; தியானயோக மார்க்கங்களைப் பரப்பி வருகிறார்கள்.

இன்று, ஒரு திறந்த மனத்துடன், அமெரிக்க சமுதாயம் ஆன்மிக வளர்ச்சியில் நாட்டம் செலுத்து கிறது.

மேற்கு நாடுகளில் இன்று எடுத்துக் காட்டாக விளங்கும் அமெரிக்காவில் இது பரவும்போது விரைவில் இது உலகம் பூராவுக்கும் பரவும் என்பதில் சந்தேகமில்லை.

இந்தியாவை விட பல்வேறு நிலைகளில் அமெரிக்கா இதை ஏற்று வளர்கின்ற பக்குவம் படைத்த நிலையில் இருக்கிறது. அமெரிக்க சமுதாய வளர்ச்சியைப் பார்த்த யாரும் அனுபவத்தில் இதைக் கூற முடியும்.

மாறாக, நமது நாட்டில் ஆன்மிக அடிப்படைகள் சிதைந்து நேர் எதிர் திசையில் செல்வதாக இருந்தாலும் –

சமுதாய வாழ்வில் அரசியல் சீர்கேடுகள் ஆன்மிக உணர்வுகளின் நம்பிக்கையை அழித்து விட்டதாகத் தோன்றினாலும் –

நம் நாட்டின் சரித்திரத்தையும், கால ஓட்டத்தையும், மனித சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சியையும் பார்க்கும்போது -

"இந்த அவல நிலை அப்படியே நீடிக்க முடியாது" என்று நம்பிக்கை நமக்கு ஏற்படுகிறது; நம் நாடு மாறத்தான் போகிறது.

தனக்குரிய ஒரு தலை சிறந்த இடத்தை உலக சமுதாயத்தில் அடுத்த நூற்றாண்டுக்குள் இந்தியா பெறத்தான் போகிறது.

காந்தியும் வள்ளலாரும் வந்ததன் பயனை உணர்ந்தோம்.

ஆனால் அந்த வழியில் தொடர்ந்து சென்று அதற்கும் மேற்படியில் மனித சமுதாயத்தை அழைத்துச் செல்லும் பணியில் நமது நாட்டு அறிஞர்களும் நல்லவர்களும், காந்திய வாதிகளும், தவறி விட்டார்கள்; தோற்றுப் போய் விட்டார்கள்.

காரணம் இவர்கள் ஒதுங்கி நின்றுவிட்டார்கள். காந்தியத்தை மேற்கொண்டு வளர்க்கும் பணியில் நடப்பு வாழ்வை, சமுதாய வாழ்வை கண்காணிக்கத் தவறிவிட்டார்கள்.

நல்லவர்கள் ஒதுங்கி நின்றதன் விளைவாக "நல்லவர் அல்லாதவர்கள்" பொது வாழ்வை நிறைக்கத் துவங்கிவிட்டார்கள்.

காந்தியம் ஒரு ஒளி; காந்தி என்றாலே ஒளி என்று அர்த்தம். இருளை விரட்டும் ஒளி.

காந்தியம் நமது அறியாமையை அகற்ற வந்த பகல்.

அந்தப் பகலுக்குப் பின் இன்று இரவு வந்திருக்கிறது. மீண்டும் விடிந்துதான் ஆகவேண்டும்.

விடியலின் அடையாளங்கள் தெரிகின்றன.

புதிய உ.தயம் தென்படுகிறது.

அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

நாம் நமது பங்கைச் செய்தோமா, செய்கிறோமா, செய்ய முன்வரப் போகிறோமா - என்பதுதான் கேள்வி.

எதுவும் தானாக நிகழ்வதில்லை. செயலினால் தான் விளைவுகள் நிகழ்கின்றன.

தெளிவான லட்சியம் இருக்கும் போதுதான் நாம் தீவிரமாக செயல்பட முடியும்.

லட்சியம் தெளிவானபின், திட்டமிட வேண்டும். பின் திட்டங்களை செயல்படுத்தவேண்டும்.

நம் எல்லோருக்கும் அதில் பங்கிருக்கிறது. உங்களது பங்கை இட முன்வாருங்கள்.

மனித சமுதாயத்தை புனிதம் நிறைந்த, ஆற்றல் மிக்க ஒரு நிலைக்கு நாம் எடுத்துச் செல்ல வேண்டும்.

முதலில் நாம் அதுவாக வேண்டும்.

ஜான் நெஸ்பிட் கூறிய இரண்டாவது முக்கிய விஷயம்: அடுத்த தலைமுறையில் பெண்கள் முக்கியத்துவம் பெறுவார்கள் என்பதுதான்.

ஒடுக்கப்பட்ட நிலை, வாய்ப்பின்மை, சம்பிரதாயக் கொடுமை, வரதட்சணை, சிசுக்கொலை, கல்வியின்மை என்று பல்வேறு கொடுமைகளால் காலங்காலமாக பாதிக்கப்பட்டிருக்கும் பெண்கள்

சமுதாயம் அடுத்த நூற்றாண்டில் அதற்குரிய் இடத்தைப் பெறும்; பெற்றாக வேண்டும்.

நண்பர்களே! பெண்மைக்கு மற்றொரு பெயர் சக்தி. "சக்தி வெல்க, சக்தி வாழ்க!" என்று பாரதியாருடன் சேர்ந்து நாமும் கூத்திடுவோம்.

பெண் சக்திதான் சரிபாதி மக்கள் சக்தி.

அது சமத்துவம் பெறும்போது ஓம்சக்தி என்ற தனிமனித சக்தியும், பெண்சக்தி என்ற மக்கள் சக்தியும் பரிணாம வளர்ச்சியின் பல படிகளைக் கடந்து பூரணத்துவத்தை நோக்கி நடைபோடும்.

அதுதான் நியாயம்; அதுதான் உண்மை.

ஓம்சக்தி! ஓம் சக்தி! வாழ்க மக்கள் சக்தி!

10

ஜப்பானிய வெற்றியின் ரகசியங்கள்

ஒரு துடிப்பு நிறைந்த ஆசிய சமுதாயம் ஐரோப்பிய நாடுகளை பின்னுக்கு தள்ளிவிட்டு ராஜ நடை போடுகிறது. பொருளாதார முன்னேற்றமல்ல இது. ஒரு நாட்டின் பொருளாதாரத் துறையில் நடந்த அதிசயம் இது.

எனவே தான் "என்ன நடந்தது? எப்படி நடந்தது? நாம் என்ன கற்றுக் கொள்ளலாம்?" என்று உலக நாடுகள் ஜப்பானைப் பார்க்கின்றன. அவர்களைப் பற்றி அறிந்து கொள்கின்றன.

மாடு பூட்டாமல் வெறும் வண்டியும் மூக்கணாங் கயிறும் மாத்திரம் தெருவில் ஓடுகிறது என்றால் அது என்ன அதிசயம்! அந்த அதிசயத்தைத் தான் தெருவில் ஓடும் காராகப் பார்க்கிறோம். மாட்டை ஒதுக்கிவிட்டு மாட்டுக்குப் பதில் ஒரு யந்திரத்தை உள்ளே வைத்து விட்டான் மனிதன். விஞ்ஞான தொழில் நுட்பம் பிறந்தது.

அப்படிப்பட்ட விஞ்ஞான தொழில் முன்னேற்றம் வெள்ளைக்காரர்களுக்கே உரியது என்ற நிலையை மாற்றி சற்றே குள்ளமாக இருந்த ஒரு மனித

இனம் - நம்மைப் போன்ற ஓர் ஆசிய இனம் - இதை சாதித்திருக்கிறார்கள்.

நம்முள் எழுவது ஆர்வம். "ஆகா! அப்படி நாமும் செய்ய முடியுமா? என் நாட்டை இப்படி உயர்த்த முடியுமா?" என்ற ஆசை, வேகம்.

என்ன, ஒரு நாடு அதன் நிலவளத்தினால் நீர்வளத்தினால் அதன் கனிவளத்தினாலா முன்னேறி விடுகிறது? இல்லை. ஒரு நாடு அங்கே வாழும் மக்களின் மனவளத்தால் தான் முன்னேறுகிறது. ஆர்வம் கொண்ட மக்கள், "செய்யமுடியும்" என்ற நம்பிக்கை கொண்ட மக்கள்தான் சமுதாயத்திற்கு சமுதாயம் வித்தியாசப்படுகிறார்கள்.

நேற்று இரண்டாவது உலக மகா போரில் தோல்வியுற்று சிறுத்துப் போன ஜப்பானை வீறு கொண்டிடச் செய்தது எது? சில குணங்கள், சில மனித இயல்புகள், சில அணுகுமுறைகள், சில புதிய வழக்கங்கள்.

கடுமையான உழைப்பு: பதினாலு மணி நேரம் உழைக்கும் உழைப்பு.

பொறுமை: பொறுமை என்றால் அப்படி ஒரு பொறுமை. முகத்தில் கூட பதற்றத்தைக் காட்டாமல் "ஆங்க்" "ஆங்க்" என்று எது சொன்னாலும் வாங்கிக் கொள்ளும் அந்தப் பொறுமை, நிதானம்.

சுய கட்டுப்பாடு: "பசிநோக்கார் கண்துஞ்சார் எவ்வெவர் தீமையும் மேற் கொள்ளார், கருமமே கண்ணாயினார்" என்று ஒரு பாடல் தமிழில் உண்டு. பசி, தாகம், தூக்கம், சூழ்நிலையில் நடக்கும் அரசியல்

மற்றும் எந்த வேலையும் இவர்களைத் திசை திருப்புவதில்லை. எடுத்ததை முடிக்க வேண்டும், சொன்னதைச் செய்யவேண்டும். முடித்துவிட்டுத் தான் மறுவேலை என்ற தொழில் ஈடுபாடு - அப்படிப்பட்ட மன உறுதி, வைராக்கியம்.

பிறரது உணர்வுகளை மதிக்கும் குணம் மரியாதை, அன்பு, விவாதங்களில் அமைதி, சாந்தம், பிறரைப் புரிந்து கொள்ளும் நல்ல குணம், பிறர் செய்வதில் இருக்கும் நியாயத்தை அவர் கோணத்தில் பார்க்கும் பண்பு, பிறரது உரிமைகளை மதிக்கும் பெருந்தன்மை, ஓடும் ரயிலில் கூட சப்தம் போட்டுப் பேச மாட்டார்கள். நமது ஊரில் சினிமாக் கொட்டகையில் பின்புற சீட்டில் அமர்ந்து உரத்து நடத்தும் விமர்சனத்தை அங்கே பார்க்கமுடியாது? அது அவமானம்.

இது தான் அவர்களது வெற்றிக்கு வழி வகுத்த குணங்கள்.

நம்மில் பலரும் இந்த குணங்களை அறிந்தவர்கள் தான். இருந்தும் ஏன் நாம் முன்னேறவில்லை? காரணம்: நாம் அறிவை அறிவாக தெரிந்துக் கொண்டிருக்கிறோம். சுயகட்டுப்பாட்டின் வழி முறைகள் அனைத்தும் நமக்குத் தெரிந்திருக்கிறது. அதைப் பற்றி பெரிய கட்டுரையே நம்மால் எழுத முடியும். ஆனால், அந்த குணத்தை தனி மனித வாழ்வின் ஒரு பகுதியாக குழந்தைப் பருவத்திலிருந்தே ஜப்பான் வளர்த்திருக்கிறது. நாம் அதைச் செய்ய வில்லை.

எது தனக்கும் நாட்டுக்கும் நல்லது என்று ஜப்பானியர்கள் தெரிந்து கொள்கிறார்களோ அதை

அவர்கள் கடைபிடிக்கிறார்கள். இதுதான் சூட்சுமம், நமது நாடு படித்தவர்கள் நிறைந்த நாடு; கல்விமான் களைக் கொண்ட நாடு. கல்வி பிறருக்கு போதிப்பதற் காகவும் தெரிந்து கொள்ளும் விஷயமாக பயன்படுகிறதே தவிர அதைக் கடந்து வாழ்வாக அது மாறவில்லை. இது தான் ஜப்பானிய வித்தியாசம்.

நல்ல விஷயங்கள் சமுதாய குணங்களாக எப்படி மாற்றுகிறார்கள்? ஓர் உதாரணம்: தகவல் சேகரிப்பு என்பது ஒரு விஷயம்.

அவர்களுடைய அறிவு தாகம் - தகவல் தாகம், "எதைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும். பின்னால் ஒரு நாள் உதவும்" என்ற விஷய தாகம் நம்மை அதிசயிக்க வைக்கிறது.

அதை எப்படிச் செய்கிறார்கள்?

தனியாகவா? அல்ல! ஒரு குழுவாகச் சேர்ந்து செய்கிறார்கள். ஒரு விஷயத்தைப் பற்றி என்னென்ன தெரிந்து கொள்ள முடியுமோ அதை எல்லாம் அவர்கள் சேகரிக்கிறார்கள்.

ஜப்பானியர்கள் உடல் அளவில் சற்று சிறிய அமைப்பு கொண்டவர்கள் என்று சொல்லலாம். இது மாறி வருகிறது. ஊட்டச் சத்தை தெரிந்து உணவில் சேர்த்திருக்கிறார்கள். இப்போது அது வளர்ச்சிக்கு வேண்டிய ஒரு புரத அமிலம் (Amino Acid). பொதுவாக சைவ உணவுக்காரர்களின் உணவில் அது இல்லை. ஆசிய மக்களின் உணவில் குறைந்திருந்தது. அதை ரொட்டி மாவில் சேர்த்து ரொட்டி செய்வதன் மூலம், ஜப்பானியர்களுடைய வளர்ச்சி சென்ற தலை முறையை விட நாலு அங்குலம் உயர்ந்தது. குழுவாக

தகவல் சேகரிக்கும் மற்றோர் செய்தியைக் கவனிக்கலாம்.

1964இல் டோக்கியோவில் ஒலிம்பிக் பந்தயம் நடந்தது. ஜப்பானில் அது பெரிய நிகழ்ச்சியாக கொண்டாடப்பட்டது. ஜப்பான் மக்கள் அதில் முழு ஆர்வத்துடன் பங்கு கொண்டார்கள். அமெரிக்கா விலிருந்து வந்த நீச்சல் விளையாட்டு வீரர்கள் ஜப்பானியர்களைப் பெரிதும் கவர்ந்தார்கள்.

ஜப்பானியர்கள் என்ன செய்தார்கள் இதற்காக?

உடனே அமெரிக்காவுக்கு நீச்சல் விளையாட்டில் பங்கு பெற்ற ஜப்பானிய இளைஞர்களும் பெண்களும் அவர்களது பயிற்சி ஆசிரியரும் பயணமானார்கள். எப்படி அவர்கள் தங்கள் திறமையை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள, சிறந்த நீச்சல் திறமை கொண்ட அமெரிக்க ஆசிரியர்கள் “டீமு”க்கு பயிற்சி கொடுத்தார்கள் என்பது ஒரு விஷயம்.

அதைவிட முக்கியமாக, அமெரிக்காவில் இந்த ஜப்பானியர்கள் ஒரு விஷயத்தைத் தெரிந்து கொண்டார்கள். அமெரிக்கர்கள், பள்ளிப் பருவத்தி லேயே 7ஆவது 8ஆவது வகுப்பிலேயே நீச்சல் கற்றுக் கொள்கிறார்கள் என்கிற விஷயம் தான் அது. அமெரிக்க நீச்சல் ஆசிரியர்கள் போட்டி மனப்பான்மை கொண்ட மாணவ மாணவிகளை அடையாளங்கண்டு அப்போதிருந்தே அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கிறார்கள். இதன் விளைவாக அமெரிக்க நாட்டில் திறமை கொண்ட இளைஞர்கள் பெண்கள் ஏராளமான பேர் உருவாகும் வாய்ப்பை

ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதில் சிறந்தவர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு அதிக பயிற்சி கொடுக்க ஆரம்பித்தார்கள். இதனால் அவர்கள் நீச்சலில் பெரிய சாம்பியன்களாக தலைசிறந்தவர்களாக ஆனார்கள். அங்கே திறமையைக் கண்டு கொள்கிறார்கள், போற்றுகிறார்கள்.

நம் இந்திய நாட்டில் திறமைக்கு வாய்ப்பில்லாத நிலையையும், பல இடங்களில் திறமை ஒதுக்கப் படுவதையும் கவனியுங்கள். நம் நாட்டின் சொத்து அதன் திறமை தான். எனினும் அது எப்படி வீணடிக்கப்படுகிறது என்பதை யோசித்துப் பாருங்கள்.

நம் ஊரில் இருக்கும் சிவந்தி ஆதித்தன், ஜேம்ஸ் பிரடெரிக் போன்று விளையாட்டுத் துறையில் ஆர்வம் கொண்ட ஜப்பானிய மேல்மட்டத்துத் தலைவர்கள் "ஜப்பானில் உள்ள எல்லா ஆரம்ப பள்ளிக்கூடங் களிலும் நீச்சல் சொல்லிக் கொடுக்கப்பட்டால் நாட்டில் நீச்சல் வீரர்கள் நிறைய இருப்பார்கள். அதிலிருந்து நல்ல நீச்சல் வீரர்களை உலகப் போட்டிக்கு அனுப்ப முடியும்" என்று தீர்மானித் தார்கள். இளவயதில் இப்படி திறமையை வளர்ப்பது அவர்களுடைய குறைபாட்டை, அதிவேகமாக நீந்த முடியாத குறைகளைப் போக்கிவிட்டது. உடனடியாக ஜப்பானிலுள்ள பெற்றோர் சங்கம் விழித்துக் கொண்டது. பள்ளிகளிலேயே நீச்சல் குளம் கட்டத் தீர்மானித் தார்கள். ஏழாண்டுகளில் ஜப்பானிய கிராமங்களி லுள்ள ஆரம்ப பள்ளிகளில் நீச்சல் குளம் கட்டப் பட்டது.

1976இல் மற்றோர் காரியம் நிகழ்ந்தது. கிழக்கு ஜெர்மனியிலிருந்து நீச்சல் வீரர்கள் ஜப்பானுக்கு

வந்தார்கள். அவர்களது நீச்சல் திறமையை வெளிப்படுத்த அல்ல; வளரும் இளம் ஜப்பானிய நீச்சல் வீரர்களுக்கும், நீச்சல் ஆசிரியர்களுக்கும் நீச்சலில் முக்கியமான வெற்றி நுணுக்கங்களை சொல்லிக் கொடுக்க வந்தார்கள்.

இதன் காரணமாக ஜப்பானிய நீச்சல் உலகில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. முதன் முதலாக ஜப்பானிய நீச்சல் வீரர்கள் சர்வதேச விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ள தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

இப்படிக் குழுவாக செயல்பட்டு தகவல் சேகரிக்கும் குணம் என்ன எல்லா மனிதனிடம் இயல்பாக நாம் எதிர்பார்க்கும் அன்பு, பொறுமை, மன்னிக்கும் மனோபாவம் என்ற குணங்களில் சேர்ந்த ஒன்றா? இல்லை.

இது ஒரு புதிய குணம், மனோபாவம், வாழ்வில் முன்னேற நம் துறையில் சாதிக்க அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி, அந்த முயற்சி ஏழெட்டு ஆண்டுகளில் பலன் தந்தது. சமுதாயத்திலேயே இந்த ஜப்பானிய அணுகுமுறை பெரும் மாற்றம் ஏற்படுத்தியது. அதனால் உலக அரங்கில் அவர்களுக்கு கௌரவத்தைத் தேடித் தந்தது.

"தகவல் சேகரிக்கும் குணம்" அதுவும் ஒரு குழுவாக தகவல் சேகரிக்கும் குணம் - இது தான் வெற்றிக்குக் காரணம்.

இது எப்படி சமுதாயத்தின் மனோபாவமாக - உயர் குணமாக - மாறியது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

"குழுவாக இருந்து தகவல் சேகரிக்கும்" குணத்தை ஜப்பானியர்கள் எல்லாத் துறைகளிலும் கடைபிடிக்கிறார்கள்.

இதில் இருக்கும் முக்கிய விஷயம் - நாம் தெரிந்து பயன்படுத்த வேண்டிய விஷயங்கள் - இரண்டு விஷயங்கள் 1. தகவல் சேகரிக்கும் பண்பு, 2. அதுவும் ஒரு குழு அமைத்து.

தகவல் சேகரிக்கும் பண்பு: ஒரு மேடைப் பேச்சானாலும் பேச்சாளன் எல்லாத் தகவல்களும் பேசும் விஷயம் பற்றி சேகரிக்க வேண்டும். ஒரு தொழில் துவங்கினாலும் அது பற்றிய எல்லா விஷயங்களையும் சேகரித்துத் தெரிந்து கொண்டால் தான் நாம் தொழிலில் தோற்காமலிருக்க முடியும். இதைத்தான் "தயார் நிலை" என்று மனவியலில் கூறுகிறோம். "சீடன் தயாராயிருக்கும் போது குரு தோன்றுவார்" என்பதும் இதுதான். நாம் தயார் நிலையில் இருந்தால் குரு நம்மைத் தேடி, நம்முன் தோன்றுவார் என்பது. "தயார் நிலையில் இருப்பவனுக்கு வெற்றிக் கனி கைமேல் விழும்" என்று சொல்வதற்கு ஒப்பாகும். தயார் நிலையும் வாய்ப்பும் சேருவது தான் அதிர்ஷ்டம் என்று மாபெரும் விஞ்ஞானி பாஸ்டியூர் எழுதுகிறார். "அதிர்ஷ்டத்தை அழைக்கும் அன்பர்களே, தயார் நிலையில் இருங்கள். எல்லா வகையிலும் உங்களைத் தயார் செய்து கொள்ளுங்கள். உங்கள் தகுதிகளை வளர்த்துக் கொள்ளுங்கள். அதன் பின் அதிர்ஷ்ட தேவதை உங்களைத் தேடி வருவாள்" என்று நம் நாட்டு ஞானி மட்டுமல்ல பிரெஞ்சு நாட்டு விஞ்ஞானியும் கூறுகிறார்!

இரண்டாவது ஒரு குழுவாகத் தகவல் சேகரிக்கிறார்கள் ஜப்பானியர்கள். ஆங்கிலத்தில் இதை TEAM WORK (கூட்டு முயற்சி) என்போம். இதிலுள்ள இரண்டு விஷயங்களைக் கவனியுங்கள். ஒரு தனி மனிதன் தகவல்களை, விஷயங்களைச் சேகரித்தால் அவனது திறமை அங்கு அதில் ஈடுபடும் நேரம், அவன் புரிந்து கொள்ளும் விதம் என்று எல்லாவற்றிற்குமே ஒரு எல்லை உண்டு. வரம்பு உண்டு.

மாறாக பல பேர்களை சேர்த்துக் கொள்ளும் போது அத்தனை பேருடைய திறமையும் சேர்கின்றன. அத்தனை பேருடைய நேரத்தினால் அபரிமிதமான பொருள் உருவாகிறது. அது எல்லா அம்சங்களையும் கொண்டதாகவும் இருக்கிறது.

இரண்டாவதாக ஒரு குழு இப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபடுவதால் எல்லோரும் பயனடை கிறார்கள். ஒரு குழுவிலுள்ள அத்தனை பேரும் எத்தனையோ பேருக்கு பயன்படப் போகும் முயற்சியில் ஈடுபடும் உணர்வுடன் செயல்படு கிறார்கள். நீச்சல் குழுவின் முயற்சிகளினால் ஜப்பானியக் குழந்தைகள், நீச்சல்காரர்கள், நீச்சல் ஆசிரியர் என்று ஜப்பானிய சமுதாயமே பயன் பெறுகிறது. பெருமை பெறுகிறது. இது தான் வெற்றியின் ரகசியம். ஒரு தனி மனிதனோ ஒரு குழுவோ தன்னை மறந்து எப்போது ஒரு நல்ல காரியத்தில் ஈடுபடுகிறார்களோ அன்று அந்த நாடே பயன் பெறுகிறது.

இதன் பலனை யாருமே விவரிக்க முடியாது; பயனுள்ள ஒரு காரியத்தை செய்கின்ற பெருமை

இருக்கிறதே அது தான் பெற்ற பிள்ளையை ஊரும் உலகமும் பாராட்டுவதைக் கேட்கும் பெருமை, இவர்கள் தங்களுக்காக மட்டும் பாடுபடுவதில்லை. எல்லோருக்குமாக பாடுபடுகிறார்கள்.

இப்படிப்பட்ட தன்னலமற்ற தன்மை கொண்ட வெவ்வேறு மக்களையும், விலங்குகளையும், தாவரங்களையும் தாதுப் பொருட்களையும்தான் நாம் வாழும் உலகம் படைத்திருக்கிறது. உலகம் இதை அனைவருக்கும் வாரி வழங்குகிறது. இதனால் எல்லோரும் பயன் பெறுகிறார்கள்.

ஒரு காந்தியினால் உலகம் வாழ்கின்றது. புத்த பிரானை, ஏசு கிறிஸ்துவைப் பெற்றதால் உலகம் சிறந்தது. அவர்களது வாழ்வால் மக்கள் விடுதலை பெற்றார்கள். உயர்ந்தார்கள்.

ஒரு விலங்கினால் பசுவால் நம் குழந்தைகளுக்கும் நமக்கும் பால் கிடைக்கிறது. ஆடு, மாடு, பாம்பு என்று எல்லாமே நமக்கு உதவி செய்கின்றன.

ஒரு நெல் விதையால் கோதுமை விதையால், தென்னங்கன்றால் உலகமே பயன் பெறுகிறது. இது தான் உலக இயற்கை (TEAM WORK) கூட்டு நன்மை, கூட்டு நன்மை பெறுகிறது சமுதாயம். அது தான் கர்ம யோகம். பற்றற்ற தொண்டு.

இந்த இரண்டு மாபெரும் குணங்களையும் குழுவினால் தகவல் சேகரிக்கும் செயலில் ஜப்பான் பெற்றிருக்கிறது. ஜப்பானிய சமுதாயமே வளர்ந்து தானும் வாழ்ந்து பிறரையும் வாழ்விக்கிறது.

நம் நாடு முன்னேற ஜப்பானியரிடமிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய அதே விஷயத்தை

மற்றோர் துறையில் ஜப்பானியர்கள் செய்வதைப் பார்ப்போம்.

ஜப்பானிய அரசிலும், தொழில் துறையிலும் பணியாற்றும் அரசாங்க உயர்மட்ட அதிகாரிகள், நாட்டின் பல்வேறு தொழில் துறைகளைப் பற்றிய தகவலையும் வெளிநாட்டு நுட்பங்கள், சேகரிப்பதும் தெரிந்து வைத்திருப்பதும் "தங்கள் கடமை" "தங்கள் பொறுப்பு" என்று எண்ணுகிறார்கள்.

ஒவ்வொருவரும் அவரவர்கள் துறையில் தகவல் சேகரிப்பதில் மன்னர்களாக இருக்கிறார்கள். நாட்டின் தொழில் வளர்ச்சி பெற அரசாங்க எல்லையைக் கடந்து "என்ன செய்ய முடியும் என் பதவிப் பொறுப்பிலிருந்து?" என்று தகவல் சேகரித்து உதவுகிறார்கள்.

"உலக சந்தையின் நிலை என்ன? எந்தப் பொருளுக்கு தேவை அதிகம்? எதை நோக்கி மக்கள் தேவையும் ஆசையும் வளர்கிறது?" என்பதைப் பற்றி சர்வே செய்கிறார்கள். தகவல் பெறுகிறார்கள். புதிய புதிய கண்டுபிடிப்புகள், உலகில் எங்கே ஏற்படுகின்றன என்று தெரிந்து கொள்கிறார்கள், அங்கே உடனே ஆள் அனுப்புகிறார்கள். தகவல் பெறுகிறார்கள்.

ஒரு தொழிலின் வெற்றிக்கு என்ன காரணம் என்பதைத் தெரிந்திருக்கும் பல்வேறு துறை நிபுணர்கள் அரசாங்க, காரியதரிசிகள் ஆக இருக்கின்றனர்.

இரண்டாவது உலக மகா யுத்தம் முடிந்த போது ஜப்பான் இனி அடிப்படைத் தொழில்களான இரும்பு, மின்சார உற்பத்தியில் கருத்து செலுத்த வேண்டுமென

தீர்மானித்தார்கள். உடனடியாக இந்தத் துறைகளில் குழுக்களாக தகவல் சேகரிக்கும் பணி துவங்கியது..

நாட்டிய கலாநிதி டாக்டர் பத்மா சுப்ரமணியம் ஆஸ்திரேலியாவுக்கு ஒரு சர்வதேச விழாவுக்குச் சென்றிருந்த போது, "அங்கே தமிழ் பேசும் பழங்குடிகள் இருக்கிறார்கள் பார்த்துவிட்டு வா" என்று சொல்லி அனுப்பினார் காஞ்சிப் பெரியவர் சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள். அதிசயமாக, அவர்களை நாட்டிய நிகழ்ச்சியிலேயே சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது டாக்டர் பத்மாவுக்கு. அதை பத்திரிகையிலும் அவர் எழுதினார். "அவர்கள் யார்? அந்த மொழி எப்படி இருக்கிறது?" என்று நாம் ஆராய்ந்தோமா?

நம் தமிழ்நாட்டில் தமிழ்த் துறை என்ற ஒன்று, அதற்கு ஓர் அமைச்சர். நமக்கு அவர்கள் மீது எந்தவித காழ்ப்பும் இல்லை. ஆனால் இதை எடுத்துக் கொண்டு சமுதாய நோக்கில் ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்ற எண்ணம் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கோ தமிழ் ஆராய்ச்சி நிலையங்களுக்கோ ஏற்படவில்லை. இத்தகைய பழக்கத்தை, மனோபாவத்தை நாம் வளர்க்கவில்லை என்பதும் உண்மை.

இனியாவது வளர்க்க வேண்டும் என்பது தான் நமக்கு முன் இருக்கும் பெரிய சவாலாகும். அதைத் தான் ஜப்பான் காட்டும் பாடமாக நாம் எடுத்துக் கொள்ளவேண்டும்.

பிரச்சினைகளுக்கு முடிவு காணும் ஜப்பானிய அணுகுமுறையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய ஒன்று.

அவர்கள் மாற்றுக் கருத்து உடையவர்களை எதிரிகளாகக் கருதுவதில்லை. வாதத் திறமைகளில் அவர்கள் இறங்குவதில்லை. சரியான தகவல் சேகரிக்கும் வரை யாரும் எதுவுமே பேச மாட்டார்கள். அபிப்பிராயம் கூற மாட்டார்கள். அதே போல தன் கட்சி நியாயம் கூற மாட்டார்கள். பிறரை தன் கருத்தை உணருமாறு வேண்ட மாட்டார்கள்.

நல்ல முடிவு எது என்பதில் தான் அவர்களது கவனம், கவலை, முயற்சி எல்லாம் இருக்கும். அடுத்து எல்லா தட்டு மக்களும் முடிவெடுப்பதில் பங்கெடுப்ப தால் - அவர்களுக்கு "நம் முடிவு இது, நாம் எடுத்த முடிவு இது" என்ற பொறுப்பு வந்து விடுகிறது. இதனால் நிறுவனத்தின் கொள்கை அறிவிக்கப்படும் போது அதிர்ச்சி ஏதும் ஏற்படுவதில்லை. ஏனெனில் இது அவர்கள் எடுத்த முடிவு தானே!

வாழ்க்கைப் பயணத்தில் ஒரு தனிமனிதனும் சரி, நிறுவனமும் மற்றும் நாடும் சரி, தெரிந்து கொள்ளும் மாணவனாகவே இருக்க வேண்டும். தெரிந்து கொண்டதை பயன்படுத்த முன் வர வேண்டும்.

ஜப்பானிலிருந்து உலகமும் நாமும் கற்க வேண்டிய பாடங்கள் நிறைய இருக்கின்றன.

11

கல்வியே சரியான கருவி

ஜப்பானிய சமுதாயம் இன்று ஒரு படிக்கும் சமுதாயமாக மலர்ந்து விட்டது. காலையில் காப்பி அருந்த நான் ஒரு கடைக்குப் போய் உட்கார்ந்த போது, அங்கே சூப் போன்ற காலை உணவை சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒவ்வொரு ஜப்பானியரும் இடது கையில் ஒரு புத்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டிருந்தனர். பஸ்ஸில் போனாலும் ரெயிலில் போனாலும் இதே கதை தான். படிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கிறார்கள்.

இன்று அங்கே ஆங்கிலத்தை நன்கு கற்றுக் கொள்ளும் ஆர்வம் அபரிமிதமாக இருக்கிறது. பல அமெரிக்கப் பள்ளிகள் ஆங்கிலம் கற்றுக் கொடுக்க தோன்றி இருக்கின்றன. அதைவிட முக்கியமாக வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு துறைகளில் நடத்தப்படும் பயிற்சி முகாம்கள் நிறைய நடத்தப் படுகின்றன, கேட்டால் சொல்கிறார்கள், "இந்த படிப்பு எனக்கு என்றாவது ஒருநாள் பயன் தரும்!"

ஜப்பானியர்கள் பொதுவாக உலக நடப்பு களையும் விஷயங்களையும் அமெரிக்கர்களை விட நன்கு அறிந்து வைத்திருக்கின்றனர். சமீபத்தில் நடந்த ஒரு சர்வதேச சர்வேயில் கணக்கு, விஞ்ஞானம்

போன்ற பாடங்களில் இஸ்ரேலுக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தை ஜப்பானிய மாணவர்கள் பிடித்திருக்கிறார்கள்.

ஜப்பானிய பள்ளிகளில் 6, 7, 8ஆம் வகுப்புக்களிலேயே விஞ்ஞானப் பாடம் சோதனைக் கூடப் பயிற்சிகளுடன் நடத்தப்படுகிறது. விஞ்ஞான ஆசிரியர்கள் 93 சதவிகிதம் பேர் பல்கலைக் கழகங்களில் முதுநிலைப் பட்டம் பெற்றவர்களாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஆசிரியர் தகுதி அமெரிக்காவில் கூட இல்லை!

அதே சமயம் இசை, நாட்டியம் முதலிய கலைத் துறையும் கல்வித் திட்டத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன. ஆறாம் வகுப்பு மாணவர்கள் கிட்டத்தட்ட மூன்று இசைக்கருவிகளில் பயிற்சி பெற்றவர்களாக இருக்கிறார்கள்.

மற்றோர் சிறப்பு: ஆர்கெஸ்ட்ரா எனப்படும் கூட்டு இசைக்கல்வியில் எல்லோரும் பயிற்சி பெறுகின்றனர். அதாவது ஜப்பானிய இளைஞர்களும் பெண்களும் இசையை முழுமையாக கற்கிறார்கள். அப்படி இருக்கிறது அவர்கள் பாடத்திட்டம்!

மிக முக்கியமான ஒன்று அவர்கள் பள்ளி செல்லும் நாட்கள் ஓர் ஆண்டில் 240 நாட்கள். மாறாக அமெரிக்காவில் 180 நாட்கள்தான். அதேபோல பள்ளிக்கு மாணவர்கள் வரவில்லை என்பது மிக மிக குறைவு. 1970லிருந்து ஜப்பானிய மாணவ சமுதாயத்தில் 90 சதவிகிதம் பேர் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடிக்கிறார்கள். 1950ஆம் ஆண்டில் பத்து சதவிகிதம்

பள்ளி உயர்நிலைப் படிப்பை முடித்திருந்தால் பெரிய காரியம். எவ்வளவு பெரிய மாறுதல் பாருங்கள்!

பள்ளியிலிருந்து வெளி வருபவர்கள் 40 சதவிகிதம் பேர் பல்கலைக்கழகம் செல்கிறார்கள், பட்டப் படிப்பிற்காக. எனினும் போதுமான இடம் தான் பல்கலைக்கழங்களில் மேல்படிப்புக்கு இல்லை.

ஜப்பானிய கல்வி மாணவர்களிடம் சுய கட்டுப்பாட்டை வலியுறுத்துகிறது. சமுதாயத்தைப் பற்றி படிக்கும் பாடங்கள் மூலமும் வாழ்க்கை நெறிகள் என்ற பாடத்தைப் படிக்கும் போதும் அவர்கள் சுய கட்டுப்பாட்டை நன்கு அறிந்து கொள்கிறார்கள். எப்படி ஒரு முக்கியமான குணம் கவனிக்கப்பட்டு பாடமாக்கப்படுகிறது என்பதைக் கவனியுங்கள்.

அதுவன்றி பாடத்தை உரக்கப் படிக்க என்று ஒரு பகுதிநேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அங்கே சான்றோரின், சாதனையாளரின் வாழ்க்கை வரலாறு களைப் படிக்கிறார்கள். இது அவர்களது சுயகட்டுப் பாட்டை வளர்க்க பெரிதும் உதவுகிறது. அதைவிட அன்றாட வகுப்பறை அனுபவங்களில் எப்படி கட்டுப் பாட்டுடன் பிறரது உரிமைகளில் தலையிடாது செயல் படவேண்டும் என்று நேரடி அனுபவப் பயிற்சி பெறுகிறார்கள்.

எல்லா மாணவர்களும் பிறரிடம் மரியாதை செலுத்த வேண்டும் என்பதில் பழக்கப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். ஆசிரியர்களை மதிக்க வேண்டும் என்பதும், சக மாணவர்களிடம் பண்புடன் பழக வேண்டும் என்பதும் அதிகம் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

மாணவர்களின் பழகும் விதம் மிக உயர்ந்ததாக இருக்கவேண்டுமென்று பள்ளியில் எதிர்பார்க்கப் படுகிறது. தவறினால் தண்டனை என்பது குறைந்த அளவுதான். ஆனால் மாணவனின் செயலை அங்கீகரிக்கவில்லை என்பதை தெளிவாக மாணவன் உணரும்படி செய்துவிடுகிறார்கள்.

அதுவன்றி வாரத்தில் ஒரு பாட நேரத்தில் வகுப்பு மாணவர்கள் தங்கள் நடை, உடை, பாவனைகள், பழகும் விதத்தை சுய சோதனை செய்து கொள்ள தூண்டப்படுகிறார்கள். தங்கள் குறைகளைப் பற்றி மனம் விட்டு பேசச் செய்கிறார்கள்.

புகை பிடிப்பது என்பது பள்ளியின் அனுமதிக்கப் படாத ஒன்று. அப்படியும் மாணவர்கள் யாராவது அதில் ஈடுபட்டால், விஷயம் பெற்றோருடன் விவாதிக்கப்படுகிறது.

தவறு செய்பவர்களது பதிவேட்டில் இது கரும் புள்ளியாக குறிக்கப்படும் என்கிற பயம், இதனால் அவர்களது மேல் படிப்புக்கான வாய்ப்பும், வேலை வாய்ப்பும் பாழாகும் என்கிற பயம், மாணவர்களுக்கு இருக்கிறது. எல்லாமே சட்டதிட்டமல்ல அங்கே. ஒவ்வொருவரும் தானாகவே ஏற்படுத்திக் கொண்டிருக்கும் மரியாதைக்கும் பண்புகளுக்கும் ஏற்ப நடந்து கொள்ளவேண்டும் என்று பள்ளி எதிர்பார்க் கிறது. மாணவர்கள் இயல்பாக அப்படி நடந்து கொள்கிறார்கள்.

தாய்மொழிக் கல்வி தான் அங்கு. பிற மொழி கற்றுக் கொள்ள வேண்டுமென்றால் அம்மொழிப் பயிற்சி அதிகம் தரப்படுகிறது. நாட்டின்

பெரும்பான்மை மக்களது கலாசாரத்தைப் பற்றிய அறிவும் அந்த மொழியில் பாண்டித்யமும் பெற வில்லை எனில் அவர்கள் பொதுவாழ்வில் சம பங்கெடுத்து முன்னேற முடியாது என்ற நோக்கில், கல்வி புகட்டப்படுகிறது.

ஜப்பானிடமிருந்து நாம் என்ன கற்றுக் கொள்ள வேண்டும் ?

பலரும் சொல்கிறார்கள்:

- ஜப்பான் பிறரைக் காப்பியடித்து கேமிராவி லிருந்து கார் வரை உற்பத்தி செய்கிறது என்று குறை சொல்கிறார்கள்.
- "ஜப்பான் நிறுவனங்கள், மற்றவர்களை விட குறைந்த விலையில் பொருளை சந்தையில் தள்ளுகிறார்கள்."
- "ஜப்பானிய கம்பெனிகளுக்கு அரசு மான்யம் கொடுப்பதால் குறைந்த விலைக்கு விற்க முடிகிறது."
- "ஜப்பானிய தொழிலாளிகளுக்கு குறைந்த சம்பளம் கொடுக்கிறார்கள்; எனவே குறைந்த செலவில் உற்பத்தி செய்யமுடிகிறது"

ஆனால் குறை சொல்பவர்கள் பல விஷயங்களை மறந்து விடுகிறார்கள்.

இரண்டாவது உலக யுத்தத்தின் அழிவிலிருந்து நாட்டை மீட்டு விட்டார்கள். இது பெரிய அதிசயம். அவர்களது நிர்வாக அமைப்பு நல்ல கட்டுக் கோப்புடன் செயல்படுகிறது. கிடைக்கின்ற தொழில்

நுட்பத்தை அது கேமிராவானாலும், காரானாலும், அதை தங்கள் பாணியில் செய்து, மேம்பட்ட பொருளாக மாற்றும் வல்லமை தனித்திறம் அவர்களிடம் இருக்கிறது.

மேலாக, அவர்களது பொறுமை எதையும் ஏற்றுக் கொள்வது போல், பணிவுடன் தலையாட்டும் குணம்! அத்துடன் சுய கட்டுப்பாடு நிறைந்த கடமை உணர்வு கொண்ட தொழிலாள வர்க்கம்.

திட்டம் தீட்டுவதிலும், நிர்வாக அமைப்பிலும், முயற்சியிலும் ஜப்பானியர்கள் அமெரிக்கர்களைத் தோற்கடித்துவிட்டார்கள்.

இந்தியாவைப் பொறுத்தவரை ஜப்பான் ஒரு மொழி கொண்ட, ஒரே கலாசாரம் கொண்ட நாடு. அதனால்தான் இது சாத்தியமாயிற்று என்று எழுதும் இந்திய அறிஞர்கள் இருக்கிறார்கள்.

இது அல்ல உண்மை. சாதி, மத, இன பேதங்களைக் கடந்து எல்லோருக்கும் பொதுவான நமது அரசாங்க நிர்வாக அமைப்பில் மனிதாபி மானத்தையும் நாட்டு நன்மையையும் முன்னிறுத்திப் பார்க்கும் குணத்தையும் ஏற்படுத்தி இருந்தால் அரசாங்க யந்திரம் தொழிலுக்கு உதவியிருக்கும்; தொழில் வளர்ந்திருக்கும். அரசாங்க யந்திரம் முட்டுக் கட்டையாக வருமானவரி போடுவதிலிருந்து, லைசென்ஸ் கொடுப்பது வரை, பல்வேறு வகைகளில் மாபெரும் இடைஞ்சலாகவே இருந்து வந்திருக்கிறது. இன்னமும் அப்படியே! துயரம் தொடர்கிறது!

இரண்டாவதாக நமது கலாசாரம், அதாவது புதிய கலாசாரத்தை - சுய கட்டுப்பாட்டை பண்பை,

பொறுமையை, கடமை உணர்வை, புதியன காண்கின்ற மனோபாவத்தை, சூழ்நிலைக்கேற்ப தன்னை உயர்த்தி, பின் சூழ்நிலையை வெற்றி காணும் குணத்தை, வெளி நாட்டுப் பொருளை தனக்கேற்ப மாற்றி அதை மேம்பட்டதாக வெளிக்கொணரும் திறமை, இத்தகைய போற்றுதற்கரிய பண்புகளை நாம் ஆரம்பக் கல்வியிலிருந்து புகுத்தத் தவறிவிட்டோம்.

ஜப்பானிலே 240 நாட்கள் பள்ளி என்றால் இங்கே அதைப் போல் பள்ளி நாட்களை உயர்த்தினால் ஆசிரியர் சங்கங்கள் உடனே போராட்டத்தைத் துவங்குவார்கள். ஓட்டுக்காக ஆட்சியிலிருப்போர் அவர்களைத் திருப்தி செய்வார்களே தவிர, நாட்டு நன்மையை கொஞ்சமும் கருத மாட்டார்கள்.

பள்ளிக்கூடம் ஓர் உதாரணம்.

நம் கதை, தாலுகா அலுவலகத்திலும், இப்படித் தான்; தொழில் கூடங்களிலும் பத்திரிகை அலுவலகங்களிலும் தொழிலாளர் பிரச்னை என்று இதே கதைதான்.

"யாரும் இங்கு எதிரி அல்ல.
நாட்டு நன்மைதான் முதலில் நிற்க வேண்டும்"

என்று அணுகுகிற **பக்குவம்** ஜப்பானியரிடம் கலாசாரமாக வளர்க்கப்பட்டிருக்கிறது.

நாம் நிகழ்காலத்தில் வாழவில்லை. இல்லா விட்டால் பக்கத்து நாடுகள் எல்லாம் நம்மை மிஞ்.சி வளர்ச்சி பெற்றிருக்காது. நாம் பெரிதும் வளர்ந்,திருப்போம்.

இந்தியர்களாகிய நமக்கு நிறைய அறிவு இருக்கிறது. நிறைய தெரிந்து வைத்திருக்கிறோம். ஆனால் தெரிந்த அறிவைப் பயன்படுத்துவதில்லை. கூட்டு நன்மை என்ற மனப்பான்மை இல்லை. பிறர் நன்மையில் நமக்கு அக்கறை இல்லை. இவை அனைத்தும் ஜப்பானியரிடம் கலாசாரமாக அவர்கள் ரத்தத்துடன் ஊறிப் போயிருக்கிறது.

நம் நாட்டில் நல்லெண்ணமும் நல்ல பண்புகளும் கொண்ட மக்கள் பெரும்பான்மையோர் இருந்தாலும், அம்மக்கள் பொது வாழ்விலிருந்து தள்ளி நின்று, தாமும் ஈடுபடாமல், நடப்பதை விமரிசித்து, குறைபட்டுக் கொண்டிருக்கிற நிலைமை தான் நம்முடையது.

சென்னை திருவான்மியூர் பகுதியில், தொலை பேசி இலாகாவின் அழிச்சாட்டியம் அதிகமாய்ப் போக, உடனடியாக படித்தவர்களும் பேராசிரியர்களும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும் எல்லா நடுத்தர, மேல் மட்ட மக்களும் சேர்ந்து ஒருநாள் போராட்டமும் நடத்தினார்கள். தற்காலிக நன்மை உறுதி செய்யப்பட்டது.

அத்துடன் முடிந்து விட்டது கதை! அவர்களது தனிப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு வந்ததும், பழையபடி ஊரில் மற்றவர்களும் மற்ற துறைகளும் எக்கேடு கெட்டால் என்ன என்கிற பண்புதான் மேவுகிறது.

இது மாற வேண்டும்; மாற்றப்படவேண்டும். அது கல்வியினாலும், குழந்தை வளர்ப்பிலிருந்தும், சட்ட திட்டங்களை ஆள் வித்தியாசமின்றி எல்லோருக்கும் சமமாக செயல்படுத்துவதிலும் தான் கொண்டு வர முடியும்.

தனி மனிதர்கள் தானே மாறவேண்டும் என்று நாம் பிரார்த்தனை செய்யப் போகிறோமா? அல்லது அதை முன்னிறுத்தி அதுதான் முதல் தேவை முதல் காரியம் - முக்கிய காரியம் - என்று எண்ணி, ஒன்று கூடி திட்டம் தீட்டி செயல்படுத்தப் போகிறோமா?

என்னுடன் இந்த ஜப்பானிய மனோபாவ பயணத்தை மேற்கொண்டதற்கு நன்றி.

ஜப்பானுக்குப் போயிருந்தால் உங்கள் அனுபவத்தை எனக்கு எழுதுங்கள்.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

□ □ □

கங்கை

பாலாஜி ஆப்செட் பிரிண்டர்ஸ்
23633094 -23631794